Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு


# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

விலை ரூபா 10.00

யாழ். நகரில் தனித்துவமான
கலைநயம் மிக்க துல்லியமான
அச்சுவேலைகளுக்கு
SP சிறந்த இடம்
சுரபி பதிப்பகம்
267, நாவலர் வீதி யாழ்ப்பாணம்.

மலர்:04 | திருவள்ளுவர் ஆண்டு: 2037 | தை 03 | ஹிஜ்ரி 1426 | துல்கஜ் 15 | (16.01.2006) | திங்கட்கிழமை | இதழ் 108






செஞ்சோலை புதிய இல்ல வளாகத்தை தேசியத் தலைவர் நேற்றுத் திறந்துவைத்தார். பொதுச்சுடரை ஏற்றிவைத்த தேசியத் தலைவர் வளாகத்தின் பெயர்ப்பலகையையும் திறந்துவைத்தார். இந்த நிகழ்வில் செஞ்சோலை மாணவர்களின் கண்காட்சியும் கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன. அத்துடன் தளபதிகள், போராளிகள், கல்விச் சமூகத்தினரும் கலந்துகொண்டனர்.
(தகவலும் படமும்: விடுதலைப் புலிகளின் ஊடகப் பிரிவு)

## ஹெலிகொப்டர் வசதி வழங்கினாலும்

# அரசின் சமிக்ஞையை பொறுத்தே பாலசிங்கம் வன்னிக்கு வருவார்!



கொழும்பு

விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் வன்னிக்கு வருவதற்கு ஹெலிகொப்டர் வசதிகளை வழங்குவதற்கு இலங்கை அரசு இணங்கியிருப்பதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

இதன்மூலம் எதிர்வரும் 23 ஆம் திகதி கொழும்புவரும் நோர்வே விசேட தூதுவரும் அமைச்சருமான எரிக் சொல்ஹெய்மிடம் அரசு ஆக்கபூர்வமான திட்டம் எதனையும்

## அமெரிக்க புலனாய்வு அதிகாரிகள் அடுத்த வாரம் கொழும்பு வருகை!

கொழும்பு

எப்.பி.ஐ எனப்படும் அமெரிக்காவின் மத்திய புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளின் குழுவொன்று எதிர்வரும் 24 ஆம் திகதி கொழும்பு வரவுள்ளது.

மேற்படி குழுவில் அமெரிக்க இராஜாங்க திணைக்கள அதிகாரிகள் சிலரும் இடம்பெறவுள்ளனர் எனத் தெரியவருகிறது.

தாம் தேடி அழித்துவரும் பயங்கரவாதிகளை



வித்தன.

இதன்மூலம் எதிர்வரும் 23 ஆம் திகதி கொழும்புவரும் நோர்வே விசேட தூதுவரும் அமைச்சருமான எரிக் சொல்ஹெய்மிடம் அரசு ஆக்கபூர்வமான திட்டம் எதனையும் முன்வைத்தால் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் வன்னிக்கு விஜயம் செய்யக்கூடும் எனத்தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் 23 ஆம் திகதி கொழும்பு வரும் எரிக்சொல்ஹெய்ம் அன்றைய தினமே வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவுடன் பேச்சுக்களை (12 ஆம் பக்கம் பார்க்க)

கொழும்பு —

எப்.பி.ஐ எனப்படும் அமெரிக்காவின் மத்திய புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளின் குழுவொன்று எதிர்வரும் 24 ஆம் திகதி கொழும்பு வரவுள்ளது.

இலங்கையில் அதிகரித்துவரும் வன்முறைகள் மற்றும் போர்நிறுத்த உடன்பாடுகள் முறிவடையும் அபாயம் ஆகியவற்றைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் வகையில் நடவடிக்கை எடுக்கக்கோரி அண்மையில் அமெரிக்காவிடம் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர விடுத்த வேண்டுகோளுக்கு அமையவே இந்தக் குழுவினரின் வருகை அமையவுள்ளது என்று கொழும்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

மேற்படி குழுவில் அமெரிக்க இராஜாங்க திணைக்கள அதிகாரிகள் சிலரும் இடம்பெறவுள்ளனர் எனத் தெரியவருகிறது.

தாம் தேடி அழித்துவரும் பயங்கரவாதிகளுடன் இலங்கையில் உள்ள ஆயுதக்குழுக்களுக்குத் தொடர்பு ஏதேனும் உள்ளதா? அந்த அமைப்புக்களின் நிதிக் கொடுக்கல் வாங்கல்கள் என்ன? என்பன போன்ற விடயங்களும் இந்தக் குழு கொழும்பில் மேற்கொள்ளவுள்ள உயர் மட்டப் பேச்சுக்களில் இடம்பெறும் எனத் தெரியவருகிறது.

இதேவேளை, இக்குழுவினர் வருகைதரும் அதே தினம் அமெரிக்க இராஜாங்க திணைக்கள அரசியல் விவகார (12 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் யோசனைப்படியேனும் பேச்சுக்களை தொடங்கவேண்டும்

## சிரேஷ்ட அமைச்சர்கள் வலியுறுத்தல்

கொழும்பு —

தொடர்ந்து இழுபறிப்படாமல் விடுதலைப் புலிகளின் யோசனைப்படியே ஐரோப்பிய நாடொன்றின் தலைநகரில் உடனடியாக அமைதிப் பேச்சுக்களை ஆரம்பிக்குமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் சிரேஷ்ட அமைச்சர்கள் குழுவொன்று நேரில் வலியுறுத்தியுள்ளது.

மின்சார மற்றும் எரிசக்தித்துறை அமைச்சர் ஜோன் செனவிரட்ன, கல்வித்துறை அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த, சுகாதாரத்துறை அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா, ஊடகத்துறை அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா மற்றும் வர்த்தக வாணிபத்துறை அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே ஆகியோரே ஜனாதிபதியைச் சந்தித்து இவ்வாறு வலியுறுத்தியுள்ளனர்.

நாடு பாரிய பாதுகாப்பு நெருக்கடியை எதிர்நோக்கியுள்ள இந்தவேளையில் பேச்சுக்கான இடத்தைத் தெரிவு செய்வதில் காலத்தை இழுத்தடித்துக் கொண்டிருக்க முடியாது. இது விடயத்தில் விரைவான தீவிரப்போக்கை காண்பித்து ஐரோப்பிய நாடொன்றின் தலைநகரில் பேச்சுக்களை உடனடியாக ஆரம்பிக்க வழிவகைகளை மேற்கொள்ளவேண்டுமென்று இந்த அமைச்சர்கள் தெரிவித்தனர்.

விடுதலைப் புலிகள் அமைதிப் பேச்சுக்களில் இதயசுத்தியுடன் இல்லை என்றால் நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் பேச்சுக்கள் நடத்தப்பட வேண்டும் என்ற அவர்களது கோரிக்கையை ஏற்றுக்கொள்வதன் (12 ஆம் பக்கம் பார்க்க)

# வரணியில் இளைஞர் சுட்டுக்கொலை!

யாழ்ப்பாணம் —

கொடிகாமம் - வரணிப் பகுதியில் இளைஞர் ஒருவர் அடையாளம் தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

நேற்றுக் காலை 8.30 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் வரணி - குடமியனைச் சேர்ந்த செல்லத்துரை யோகராஜன் (வயது26) என்பவரே அடையாளம் தெரியாத நபர்களின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஊர்காவற்துறையில்

# சீருடையினரால் கைதானவர் பற்றைக்குள் சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம் —

ஊர்காவற்துறையில் சீருடை தரித்த ஆயுதபாணிகளால் நேற்றுமுன்தினம் விசாரணைக்கென கூட்டிச்செல்லப்பட்ட இளைஞர் ஒருவர் சுருவிலில் பற்றைக்காட்டுக்குள் இருந்து நேற்றுக் காலை சடலமாக மீட்கப்பட்டார்.

சடலமாக மீட்கப்பட்டவர் ஊர்காவற்துறை - பருத்தியடைப்பைச் சேர்ந்த தர்மராசா தர்மசீலன் (வயது 29) என்பவராவார். இவரது சடலத்தை மனைவி (12 ஆம் பக்கம் பார்க்க)




ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்....

EXPOAiR

021-222 3891, 222 6297, 077-2349999, 011-2372952/3, 011 - 2360290/1

email:jaffna@expoavi.com, reservations@expoavi.com.

your friend in the skies...

இலங்கையில்
முன்னணி வகிக்கும்
உங்கள் உள்ளூர்
விமாசேவை...



# மக்கள் தொடர்பகத்தை அமைக்குமாறு புங்குடுதீவு கடற்படையினர் அச்சுறுத்தல்

புங்குடுதீவு—

புங்குடுதீவு பிரதேச கடற்படையினரது மக்கள் தொடர்பக கட்டடத்தை கடற்படையினரது பொருள் உதவியுடன் புங்குடுதீவுப் பகுதி கடற்தொழிலாளர்கள், தனியார் சிற்றூர்திச் சங்கத்தினர் கட்டித்தரவேண்டும் என கடற்படையினர் அச்சுறுத்தியுள்ளனர்.

கடந்தவருட இறுதியில் இளம் பெண் தர்ஷினி கடற்படையினரால் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தி கொலைசெய்யப்பட்ட சம்பவத்தையடுத்து ஆத்திரமடைந்த மக்கள் புங்குடுதீவு மக்கள் தொடர்பகத்தை முற்றாக அழித்தனர்.

இந்தத் தொடர்பகத்தை புங்குடுதீவு பொது அமைப்புகள் புனரமைத்துத் தரவேண்டும் என கடற்படையினர் விடுத்தவேண்டுகோளை ஏற்று கட்டடத்தை அமைப்பதற்குரிய நடவடிக்கையை தொடர அவர்கள் சம்மதித்துள்ளனர். இந்தக் கட்டடம் அமைப்பதற்குரிய மூலப் பொருட்களை கடற்படையினரிடம் இருந்து பெற்று பொதுமக்கள் அமைக்க தீர்மானித்துள்ளனர்.

இதேவேளை அந்தப் பகுதி கடற்தொழிலாளர்களது தொழில் செய்யும் அனுமதி கடந்த 14 ஆம் திகதியுடன் நிறுத்தப்பட்டுள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும். (113)

## இராமநாதன் நுண்கலைப் பீடத்துக்கு 125 மாணவர்கள் இவ்வருடம் அனுமதி

யாழ்ப்பாணம் —

யாழ்.பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைப்பீடத்திற்கு இம்முறை 125 மாணவர்கள் அனுமதிக்கப்படவுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவித்தன.

சித்திரமும் வடிவமைப்பும் பாடநெறிக்கு 25 மாணவர்களும், நடனப் பாடநெறிக்கு 50 மாணவர்களும், வாய்ப்பாட்டு, பண்ணிசை, மிருதங்கம், வயலின், வீணை ஆகிய பாடநெறிக்கு 50 மாணவர்களும் அனுமதிக்கப்படவுள்ளனர். யாழ்பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைப் பீடத்துக்கு அனுமதி பெறும் மாணவர்களின் அனுமதிப்பட்டியல் இம்முறை முதல் தடவையாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் பட்டியலில் இடம் பெற்றுள்ளதாகவும் தெரியவருகின்றது.

# மஞ்சவனப்பதியில் ஒலிநாடா, இறுவெட்டு வெளியீடு



யாழ்ப்பாணம் —

கொக்குவில் மேற்கு மஞ்சவனப்பதி முருகன் ஆலயத்தின் மஞ்சவனப்பதிகம் நூல், ஒலிநாடா, இறுவெட்டு வெளியீடு நேற்று ஆலயத்தின் முருகன் ஆலய மண்டபத்தில் சைவப்புலவரும், ஓய்வுபெற்ற அதிபருமான திருஞானசம்பந்தபிள்ளை தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் மங்கள விளக்கை சட்டத்தரணி விஸ்வலிங்கம், திருமதி விஸ்வலிங்கம் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

வெளியீட்டுரையை ஆலயத்தின் பிரதமகுரு வ.விக்னேஸ்வரக் குருக்கள் நிகழ்த்தினார். வாழ்த்துரையை யாழ்.பல்கலைக்கழக இந்துநாகரிகத் துறைத் தலைவர் நாச்சியார் செல்வநாயகம் நிகழ்த்தினார்.

வெளியீட்டுரையை ஆசிரியர் ந.விஜயசுந்தரம் நிகழ்த்த, மதிப்பீட்டுரையை யாழ்.பல்கலைக்கழக இந்துநாகரிகத் துறையின் வாழ்நாள் பேராசிரியர் கோபாலகிருஷ்ண சர்மா நிகழ்த்தினார்.


## நாடக அரங்கியல் மாணவர்களுக்கு செயல் முறைப் பயிற்சிகள்

**PRACTICAL TRAINING FOR THE STUDENTS OF DRAMA &THEATRE**

செயல்திறன் அரங்க இயக்கம் 2006 ஆம் ஆண்டு தைமாதம் தொடக்கம் அரங்க வள நிலையம் ஒன்றை ஆரம்பித்து இயக்கிவருகின்றது. இவ்வள நிலையத்தில் O/L, A/L மாணவர்களுக்கான நாடக அரங்கப் பயிற்சிகள் (செயல்முறை பாடத்திட்டத்திற்கு அமைவாக) ஆரம்பமாகவுள்ளன.

பயிற்சியில் பங்குபற்ற விரும்புவர்கள் தங்கள் பெயர்களை 30.01.2006 இற்கு முன் எமது நிறுவனத்தில் பதிவு செய்து கொள்ளலாம். சனி, ஞாயிறு மற்றும் கிழமை நாட்களில் (மாலை நேரம்) வகுப்புக்கள் நடைபெறும். (விண்ணப்பங்கள் மட்டுப்படுத்தப்பட்டது)

*பயிற்சிகள் நடைபெறும் இடம்/தொடர்பு முகவரி :*

செயல்திறன் அரங்க இயக்கம
ACTIVE THEATRE MOVEMENT
அருளகம், ஆடியபாதம் வீதி.
திருநெல்வேலி.

[C/5008]



## சிறுவர் கலைப்பயில் களம்

**CHILDRENS FINE ARTS TRAINING CENTRE**

செயல்திறன் அரங்க இயக்கம் 2006 ஆம் ஆண்டு தை மாதம் தொடக்கம் சிறுவர்களுக்கான நுண்கலைப் பயிற்சிக்களம் ஒன்றை ஆரம்பித்து இயக்கி வருகின்றது.

இப்பயில் களத்தில் தமது கலையாற்றலை மேம்படுத்த விரும்பும் சிறுவர்கள் பங்கு கொண்டு பயிற்சிகளைப் பெறலாம். வட இலங்கை சங்கீத சபைப் பரீட்சைக்குத் தோற்றக்கூடியதாக பயிற்சிகள் வழங்கப்படும்.



பயிற்சிகளின் விபரம் :

1. நாடகம்
2. மிருதங்கம்
3. நடனம்
4. வாய்ப்பாட்டு
5. பாரம்பரிய கூத்துக்கள்
6. வயலின்

பயிற்சியில் பங்குபற்ற விரும்பும் சிறுவர்கள் 30.01.2006 ற்கு முன் எமது நிறுவனத்தில் பதிவு செய்து கொள்ளலாம். சனி, ஞாயிறு மற்றும் கிழமை நாட்களில் (மாலை நேரம்) வகுப்புக்கள் நடைபெறும்.

*பயிற்சிகள் நடைபெறும் இடம்/தொடர்பு முகவரி :*

செயல்திறன் அரங்க இயக்கம்
ACTIVE THEATRE MOVEMENT
அருளகம், ஆடியபாதம் வீதி.
திருநெல்வேலி.

[C/5008]



நாதன்ஸ் யாழ்ப்பாணம் (குளிரூட்டப்பட்டது)

எமது மகத்தான பொங்கல் வெளியீடு!
அல்டிமேட் ஸ்ரார் அஜித், லைலா மற்றும் பலர் நடித்த

பரமசிவன்

இயக்கம்: பி.வாசு

காட்சிகள்;- 08.30, 12.00, மாலை 3.30, (புதிய நேரம்)

மனோகரா யாழ்ப்பாணம்

ரசிகர்கள் அனைவருக்கும் எமது பொங்கல் வாழ்த்துக்கள்



இளைய தளபதி விஜய், திரிஷா (வருகிறான் வரிப்புலி நாதியாய்) மற்றும் பலர் நடிப்பில்

ஆதி

இயக்கம் ரமணா

தயாரிப்பு - S.A சந்திரசேகர் இசை -வித்தியாசாகர்
(இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு)

காட்சிகள்;- 10.30, 1.30, 4.30, 7.30. (புதிய நேரம்)

ராஜா யாழ்ப்பாணம்




காட்சி : பு.நே. 10.30, 2.00, 5.00
காட்சி நேரம் மாற்றப்பட்டுள்ளது.
ரிக்கெற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.

நிறைஞ்சனாஸ் சங்கானை

ரசிகர்கள் அனைவருக்கும் எமது தைத்திருநாள் வாழ்த்துக்கள்

அர்ஜுன், நமீதா, வடிவேல் நடித்த

ஆணை



காட்சிகள் 11.00,2.30,5.30 (பு.நே)

நாகம்ஸ் சுன்னாகம்

ரசிகர்கள் அனைவருக்கும் எமது பொங்கல் வாழ்த்துக்கள்

பொங்கல் அதிரடி வெளியீடு
விஷால், மீரா ஜெஸ்மின் மற்றும் பலர் நடிப்பில்



சண்டக்கோழி

காட்சிகள்:- காலை 10.30, 2.30,5.30 (பு.நே)


# பாடசாலையில் மாணவர்கள் சேர்ப்பு எதிர்வரும் வியாழன் முதல் ஆரம்பம்

கொழும்பு —

இந்த வருடம் அரசாங்கப் பாடசாலைகளில் மாணவர்களைச் சேர்ப்பதற்கான நடவடிக்கைகள் எதிர்வரும் வியாழக்கிழமை ஆரம்பிக்கப்படும்.

இந்தத் திட்டத்தின் கீழ்- தேசியப் பாடசாலைகளுக்கும், மாகாண கல்வியமைச்சின் கீழ் இயங்கும் பாடசாலைகளுக்கும் மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

முதலாம் ஆண்டில் சேர்த்துக் கொள்ளப்படவுள்ள மாணவர்களின் இறுதிப் பட்டியல்கள் ஏற்கனவே குறித்த பாடசாலைகளின் அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இந்தப் பட்டியல்களில் உள்ள பிள்ளைகளின் பெயர்கள் தொடர்பாக ஏதாவது பிரச்சினைகள் ஏற்படுமிடத்து அதனை நிவர்த்தி செய்வதற்கு அதிகாரிகள் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக கல்வியமைச்சின் மேன்முறையீடுகளுக்கான ஆணையாளர் சமரசேகர தெரிவித்தார்.

தெரிவுசெய்யப்பட்ட பிள்ளைகளின் பெயர்களடங்கிய பட்டியல்கள் குறித்த பாடசாலைகளின் அறிவித்தல் பலகைகளில் பார்வைக்கு வைக்கப்படும். பாடசாலை கிடைக்காத மாணவர்களுக்கு இரண்டுவாரத்தில் ஏதாவது ஒரு பாடசாலையில் அனுமதி வழங்கப்படும். (தே)

# அதிகரித்த சம்பளம் குறித்த சுற்றுநிருபம் வெளியீடு

கொழும்பு —

அரசாங்க ஊழியர்களின் அதிகரிக்கப்பட்ட சம்பளக் கொடுப்பனவுகள் தொடர்பான விபரங்களை பொதுநிர்வாக உள்நாட்டு அமைச்சு வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மகிந்த சிந்தனையை அடிப்படையாகக் கொண்ட புதிய வரவு செலவுத்திட்டத்தில் குறிப்பிடப்பட்ட பிரகாரம் இந்தச் சம்பள அளவுத்திட்டம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்த வருடம் தை மாதம் முதலாம் திகதி தொடக்கம் அமுலுக்கு வரும் வகையில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இதுதவிர 1000 ரூபா வாழ்க்கைச் செலவுப்படி மேலதிகமாக வழங்கப்படவுள்ளது. வாழ்க்கைச் செலவுச் சுட்டெண் ஒவ்வொரு ஆண்டும் ஜூன் மாதம் 30 ஆம் திகதியும், டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதியும் கணிப்பீடு செய்யப்பட்டு அதிகரிக்கப்படும்.

வாழ்க்கைச் செலவுச் சுட்டெண்ணுக்கும் மேலதிகமாக 2.50 சதம் வழங்கப்படவுள்ளது. அரசாங்க உத்தியோகத்தர்களின் இடைக்காலப்படி கொடுப்பனவுகள், போக்குவரத்து, இலவச ரயில் சேவை சீட்டுக் கொடுப்பனவுகள் அதிகரிக்கப்பட்டுள்ளதாக பொது நிர்வாக உள்நாட்டு அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

# தரம் 6 இற்கு மேற்பட்ட வகுப்புகளில் மாணவர் தொகை அதிகரிக்கப்படும்

கொழும்பு —

ஆறாம் தரத்துக்கு மேல் அனைத்துத் தரங்களிலும் வகுப்பொன்றிலுள்ள மாணவர்களின் தொகையை 45வரை உயர்த்துவதற்கு கல்வியமைச்சு தீர்மானித்துள்ளது.

முன்னர் வகுப்பொன்றில் மாணவர்களின் தொகை 40ஆக வரையறுக்கப்பட்டிருந்தது. இடமாற்றங்கள் பெற்றுச்செல்லும் அரசவங்கி, கூட்டுத்தாபன ஊழியர்களின் பிள்ளைகளை பாடசாலைகளில் இணைத்துக் கொள்வதற்கு வாய்ப்பை வழங்குவதற்கும், வெளிநாடு சென்று திரும்பும் பிள்ளைகளுக்கு வாய்ப்பை வழங்குவதற்குமே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கல்வியமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த தரங்களில் மாணவர்கள் புள்ளிகள் முறையில் சேர்க்கப்படுவதுடன் இது தொடர்பான சுற்றறிக்கை அடுத்த வாரம் பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது.

தரம் 1 தொடக்கம் 6 வரையான வகுப்புகளுக்கு இந்ததிட்டம் நடைமுறைப் படுத்தப்படமாட்டாது. (தே)

# நாடாளுமன்றத் தெரிவுக்குழு அடுத்த வாரம் முதல் செயற்படும்

கொழும்பு —

இலங்கையில் அரசசார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகள் தொடர்பாக கண்டறிவதற்காக நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழு அடுத்த வாரத்தில் இருந்து செயற்பட உள்ளது.

அரசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் இந்தத் தெரிவுக்குழுவுக்கு முன்னால் அழைத்து விசாரணை செய்யப்படவுள்ளனர். அத்துடன் அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகள் தொடர்பாக பொதுமக்களும், மேற்படி குழுவிடம் தமது முறைப்பாட்டினைத் தெரிவிக்கலாம்.

இந்தக் குழுவின் தலைவராக ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினார் நந்தன குணதிலக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்தக்குழு ஜே.வி.பி யின் ஆலோசனைக்கு அமையவே நியமிக்கப்பட்டுள்ளது. (தே)

# மேலும் 15 ஈழத்தமிழர்கள் தனுஷ்கோடி சென்றனர்



மன்னார் —

மன்னாரில் இருந்து மேலும் மூன்று குடும்பங்களைச் சேர்ந்த 10 பேர் நேற்று தனுஷ்கோடிக்கு சென்றனர்.


நேற்று முன்தினம் மன்னார் பேசாலையிலிருந்து புறப்பட்ட இவர்கள் நேற்றுக் காலை தனுஷ்கோடியை சென்றடைந்தனர். இவர்கள் ஒவ்வொருவரும் தலா இரண்டாயிரம் ரூபா படகோட்டிக்குச் செலுத்திச் சென்றுள்ளதாகத் தெரியவருகிறது.

இதேவேளை நேற்று முன்தினம் ஐந்து பேர் தனுஷ்கோடிக்கு சென்றுள்ளனர். இவர்களில் இரு ஆண்களும், ஒரு இளம் பெண்ணும், இரு சிறு குழந்தைகளும்அடங்குவர்.

கடந்த இரு தினங்களில் மட்டும் 48 பேர் மன்னாரில் இருந்து இந்தியா சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பேச்சுக் குறித்த நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இல்லையாம்!

## ஹெல உறுமயவிடம் மகிந்த உறுதி



கொழும்பு

போர் நிறுத்த உடன்பாட்டை திருத்தியமைத்தல் மற்றும் ஆசிய நாடொன்றில் மட்டுமே பேச்சுக்களை நடத்துவது போன்ற அரசின் நிலைப்பாட்டில் எந்தவித மாற்றமும் இல்லை என ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர்களிடம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஜாதிக ஹெல உறுமயத் தலைவர்களுக்கும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் இடையிலான சந்திப்பொன்று அலரிமாளிகையில் நடை பெற்ற போதே இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

ஜாதிக ஹெல உறுமய சார்பில் அதன் தலைவர் எல்லாவெல மேதானந்ததேரர், தவிசாளர் கொட்டபொல அமரகீர்த்தி தேரர், நாடாளுமன்றக் குழுத் தலைவர் அத்துரலிய ரத்ன தேரர், கொள்கை வகுப்பாளர் சம்பிக்க ரணவக்க, ஊடக இணைப்பாளர் நிசாந்த் வனசிங்க ஆகியோர் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

இந்த விசேட திட்டத்தை வடிவமைக்கையில் இந்தியா உட்பட வெளிநாடுகளின் அரசியலமைப்புக்களை ஆராய வேண்டுமென்றும் ஜாதிக ஹெலஉறுமய தெரிவித்துள்ளது.

நடைபெறவிருக்கும் சமாதானப் பேச்சுக்கள் மற்றும் போர் நிறுத்த உடன்படிக்கை மீளாய்வு என்பன குறித்தும் இந்தச் சந்திப்பில் பேசப் பட்டது.

சமாதானச் செயற்பாடுகளில் பங்குகொண்டுள்ளவர்களினதும் கருத்துக்களை அறிந்து, போர் நிறுத்த உடன்படிக்கையில் இருக்கும் சில அத்தியாயங்களைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக மகிந்த ராஜபக்ஷ இந்தச் சந்திப்பில் உறுதியளித்தார்.

நாட்டினதும் மக்களினதும் பாதுகாப்பு பாதிக்கப்படும் வகையிலான பல விடயங்கள் இந்தப் போர்நிறுத்த உடன்படிக்கையில் இருப்பதை மகிந்த ராஜபக்ஷ ஏற்றுக்கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஐரோப்பிய ஒன்றியத்தில் இணையாத நாடொன்றிலேயே சமாதானப் பேச்சுக்கள் நடத்தப்பட வேண்டுமென ஜாதிக ஹெல உறுமய யோசனை முன்வைத்தது.

இந்த யோசனையை ஏற்றுக் கொண்ட மகிந்த ராஜபக்ஷ - ஜப்பான் அல்லது தென்னாபிரிக்காவில் பேச்சுக்களை நடத்துவது சம்பந்தமாக ஆராய்ந்து வருவதாகத் தெரிவித்தார்.

ஐரோப்பிய ஒன்றியத்தில் நோர்வே அங்கம் வகிக்காத போதிலும் அந்த நாட்டில் விடுதலைப் புலிகளுக்கு சாதகமான நிலை நிலவுவதால் அங்கு சமாதானப் பேச்சுக்களை மேற்கொள்ளக் கூடாதென்பது ஜாதிக ஹெல உறுமயவின் நிலைப்பாடாகும்.

வடக்கு - கிழக்கு மாகாணங்கள் தொடர்பாக சிங்கள மக்களுக்கு இருக்கும் உரிமை தொடர்பாகவும், இந்த நாட்டில் நிலவும் பயங்கரவாதப் பிரச்சினை பற்றிய உண்மை நிலையை வெளிநாடுகளுக்குத் தெரியப்படுத்துவதற்காகவும் வெளிநாட்டமைச்சுடன் இணைந்த விசேட செயற்பிரிவொன்றை அமைப்பது சம்பந்தமாகவும் இந்தச் சந்திப்பில் ஆராயப்பட்டது.

ஒற்றையாட்சிக்குள் அதிகாரப்பகிர்வை மேற்கொள்வதற்கான விசேட திட்டங்களை வடிவமைப்பதற்காக அரசியலமைப்பு நிபுணர்கள், கல்விமான்களைக் கொண்ட அமைப்பொன்றை நியமிக்குமாறும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் ஜாதிக ஹெலஉறுமய தலைவர் வேண்டுகோள் விடுத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# திருமலை கடற்படை முகாமுள் புலிகளின் பெண் முகவராம்!

## கொழும்புப் பத்திரிகை தகவல்

கொழும்பு

திருகோணமலை கடற்படை முகாமில் விடுதலைப் புலிகளுக்குத் தகவல்களை வழங்கும் பெண் முகவர் ஒருவர் பணியாற்றுவதாகவும், இவர் திருகோணமலையில், விடுதலைப் புலிகளுடன் தொடர்புடைய அமைப்பின் தலைவரொருவரின் மனைவியென்றும் கடற்படையின் உயர் மட்டத் தகவல் தெரிவித்துள்ளதாக கொழும்புப் பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகளின் இந்த பெண் முகவர் குறித்து கடற்படை அதிகாரிகளுக்கு முன்னர் தகவல் கிடைத்ததை அடுத்து, அவரை பணியில் இருந்து விலக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட போதிலும், அரசியல் காரண மொன்றினால் அது தடுக்கப்பட்டது.

கடற்படை முகாமுக்கு வந்து செல்பவர்கள் குறித்த அனைத்து விபரங்களும் குறித்த பெண்ணுக்குத் தெரியும். இது கடற்படையினரின் பாதுகாப்புக்கு பாரிய அச்சுறுத்தலாகும் கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

இந்தப் பெண்ணின் கணவர் கடந்த வாரம் படையினரை திருகோணமலையில் இருந்து வெளியேற்ற வேண்டுமென கூறியுள்ளாரெனவும் அந்தப் பத்திரிகை தெரிவித்துள்ளது. (தே)

# சர்வகட்சி மாநாடு; வியாழன்று ஏற்பாடு!

கொழும்பு

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்களை நடத்தும் இடம் குறித்த இணக்கப்பாட்டை எட்டும் நோக்குடன் எதிர்வரும் வியாழக்கிழமை இரண்டாம் சுற்று சர்வகட்சி மாநாடு கூட்டப்படவுள்ளது.

இந்த மாநாட்டில் அமைதிப் பேச்சுக்கள் குறித்து எந்தவித நிகழ்ச்சி நிரலும் தயாரிக்கப் படப் போவதில்லை. திறந்த மனதுடன் சில விடயங்களைப் பேசப்போகின்றோம். பேச்சுக்கான இடம் தொடர்பாக தென்னிலங்கையில் இணக்கப்பாட்டை எட்டுவதே இந்தச் சந்திப்பின் நோக்கமென ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

தென்னிலங்கையில் சிங்கள கட்சிகளுடன் பேசிய பின்னரே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய சிறுபான்மைக் கட்சிகளை அழைத்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பேசவுள்ளார் என விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த சர்வகட்சி மாநாட்டின் முதல் சுற்று கடந்த திங்கட்கிழமை நடை பெற்றது. இந்தச் சந்திப்பில் அமைதிப் பேச்சுக்களை உடனடியாக ஆரம்பிக்க வேண்டிய அவசியம் தொடர்பாக இணக்கம் காணப்பட்டது.

இந்தச் சந்திப்பில் ஐ.தே.க. சார்பில் - நாடாளுமன்றக் குழுத் தலைவர் விமல் வீரவன்ச மற்றும் மற்றும் முன்னாள் அமைச்சர் அனுரகுமார திஸாநாயக்க ஆகியோரும் ஹெல உறுமய சார்பில் எல்லாவெல மேதானந்த தேரரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# எம்.பிக்களின் சம்பளத்தை அதிகரிப்பதற்கு இணக்கம்!

கொழும்பு

நாடாளுமன்ற உறுப்பினர்களின் சம்பளத்தை அதிகரிப்பதற்கு அரசியற் கட்சித் தலைவர்கள் உடன்பட்டுள்ளதாக நாடாளுமன்ற தகவல்கள் தெரிவித்தன.

கடந்த வாரம் நாடாளுமன்ற கட்டடத்தொகுதியில் இடம் பெற்ற கட்சித் தலைவர்களிடையேயான கலந்துரையாடலின்போது அரசாங்க கட்சியின் பிரதான அமைப்பாளர் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே இது குறித்து கட்சித் தலைவர்களிடம் தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் வகிக்கும் பதவிகளுக்கேற்ப அவர்களின் சம்பளத்தை உயர்நீதிமன்ற நீதிபதிகளின் சம்பளத்திட்டத்துக்கு சமனாக அதிகரிக்க வேண்டுமென கட்சித் தலைவர்கள் உடன்பட்டுள்ளனர்.

எனினும் இது தொடர்பாக சபாநாயகரிடமும், பிரதமர், மற்றும் எதிர்க்கட்சித் தலைவரிடமும் தெரிவித்து முடிவை மேற்கொள்ள வேண்டுமென, இந்தக் கலந்துரையாடலில் பங்குபற்றிய பிரதிச் சபாநாயகர் கீதாஞ்சன குணவர்த்தன தெரிவித்தார். (தே)

# செம்மணி மரபணு அறிக்கையை சட்டமா அதிபர் கோருகிறார்!

கொழும்பு

படையினரால் படுகொலை செய்யப்பட்டு செம்மணியில் புதைக்கப்பட்டு பின்னர் தோண்டியெடுக்கப்பட்ட எலும்புக்கூடுகளின் மரபணு சோதனை அறிக்கையை உடனடியாக வழங்குமாறு சம்பந்தப்பட்டவர்களிடம் சட்டமா அதிபர் கோரவுள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

செம்மணி மனிதப் புதைகுழிகள் தோண்டப்பட்டு 12 எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டன.

இந்த சம்பவம் தொடர்பான விசாரணைகள் தொடங்கி ஆறு வருடங்கள் கழிந்த நிலையிலும் அந்த விசாரணைகளை நடத்தி முடிக்க இரகசியப் பொலிஸாருக்கு முடியாமலுள்ளது. இதனை கவனத்திலெடுத்த சட்டமா அதிபர் இது தொடர்பான மரபணு சோதனை அறிக்கையைக் கோரத் தீர்மானித்துள்ளார். (தே)




வன்னிப் பகுதி நோக்கி இடம்பெயரும் மக்களுக்காக முகமாலையில் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் அமைத்திருக்கும் இடைத்தங்கல் முகாமையும் - படகுகளையும் பொருட்களையும் ஏற்றிக் கொண்டு லொறியில் மக்கள் செல்வதையும் படங்களில் காணலாம்.

# கண்காணிப்புக்குழு அலுவலகம் மீதான தாக்குதல்; இராணுவத் தரப்புக்கு எதுவுமே தெரியாதாம்!

கொழும்பு

மட்டக்களப்பு கண்காணிப்புக்குழு அலுவலகம் மீதான தாக்குதலை யார் நடத்தியதென்பது குறித்து எமக்கு எதுவும் தெரியாது. இது நிச்சமாக ஒரு பயங்கரவாத செயலாகும். போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு அலுவலகம் ஏன் குறிவைத்துத் தாக்கப்பட்டதென்பது தெரியவரவில்லை என பிரிகேடியர் அசுல் ஜெயவர்த்தன பி.பி.ஸி தமிழோசைக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்தார்.

அதில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

இந்த தாக்குதலை இராணுவம் நடத்த காரணம் எதுவும் இருப்பதாக எனக்கு தெரியவில்லை. எமக்கும் கண்காணிப்புக்குழுவினருக்குமிடையே சுமுகமான உறவுள்ளது. விடுதலைப் புலிகள் அல்லது அவர்களது ஆதரவு குழுக்களோ இதனைச் செய்திருக்கலாம். தாக்கப்பட்ட கட்டடத்திற்கு பாதுகாப்பளித்து வந்த இராணுவத்திற்கும் அரசாங்கத்திற்கும் களங்கம் ஏற்படுத்தும் வகையில் இது நடத்தப்பட்டிருக்கலாம்.

இதன் மூலம் அரசு மற்றும் படையினர் மீது கண்காணிப்புக் குழு வைத்திருந்த நம்பிக்கை குறைந்து விட்டதாக நான் கருதவில்லை. அரசின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் அவர்கள் எவ்வித பிரச்சினையுமின்றி தமது பணியைத் தொடர்ந்து மேற்கொள்ளலாம் எனத் தெரிவித்தார்.

# அமெரிக்காவின் உதவியுடன் புலிகளுக்கு எதிரான யுத்தம்!

## ஜாதிக ஹெல உறுமய திட்டமிடுகிறது

கொழும்பு

விடுதலைப்புலிகளுக்கு எதிரான யுத்தத்துக்கு அமெரிக்காவின் இராணுவ உதவிகளைப் பெற வேண்டியது அவசியமென ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக ஜாதிக ஹெல உறுமய மேலும் தெரிவித்துள்ளதாவது -

இதனால் இந்தியா அந்நியப்படுத்தப்படமாட்டாது. ஏனெனில், அமெரிக்காவும் இந்தியாவும் இன்று உலக பயங்கரவாதத்திற்கு எதிராகக் கைகோர்த்துள்ளன.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் விடுதலைப்புலிகளுக்கு விடுத்துள்ள எச்சரிக்கை வரவேற்கத்தக்கது. பயங்கரவாத யுத்தத்துக்கு எதிராக அமெரிக்கா இலங்கைக்கு ஆயுதம் மற்றும் இராணுவப் பயிற்சிகளை வழங்க வேண்டும்.

புலிகள் அல்-ஹைடா இயக்கத்துடன் மட்டுமல்ல, உலகளாவிய ரீதியில் பயங்கரவாத அமைப்புகளுடன் தொடர்புகளை வைத்துள்ளனர். இந்த நிலையில் அமெரிக்கத் தூதுவரின் எச்சரிக்கை மிகவும் வரவேற்கத்தக்கதாகும்.

தலைமை நாடென்ற ரீதியில் அமெரிக்காவுக்கு இதுவொரு கடப்பாடாகும்.

புலிகளின் செயற்பாடுகளைக் கண்டித்து உலக நாடுகள் வெறுமனே அறிக்கைகள் வெளியிடும் நிலையில் அமெரிக்காவின் இந்த எச்சரிக்கையானது வரவேற்புக்குரியது.


இராணுவ மற்றும் ஆயுத உதவிகளை வழங்க அமெரிக்கா முன்வரும்போது அதனை எமது அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இது இந்தியாவை அந்நியப்படுத்துவதாக அமையாது. உலக பயங்கரவாதத்துக்கு எதிராக அமெரிக்காவும் - இந்தியாவும் உடன்பாடுகளை எட்டியுள்ளதுடன், பல்வேறுபட்ட செயற்பாடுகளை இணைந்து மேற்கொள்கின்றன.

எனவே, இரு நாடுகளின் உதவிகளும் எமக்குக் கிடைக்கும். அதேநேரம், எமக்கு உதவுவதாகத் தெரிவிக்கும் அமெரிக்கா இந்தியாவுக்கெதிரான செயற்பாடுகளை மேற்கொள்ள ஜாதிக ஹெல உறுமய இடமளிக்காதென்றும் அந்தக் கட்சி தெரிவித்துள்ளது.

## வி.பி கின்னை முக்கோணத் தொடர்

# தென்னாபிரிக்கா 5 விக்கெட்டுக்களால் அவுஸ்ரேலியாவைத் தோற்கடித்தது!




பிறிஸ்பேர்ன் —

அவுஸ்ரேலியாவில் நடைபெற்று வரும் வி.பி.கிண்ண முக்கோணத் தொடரில் நேற்று நடைபெற்ற அவுஸ்ரேலிய தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான போட்டியில் - தென்னாபிரிக்க அணி 5 விக்கெட்டுக்களால் அவுஸ்ரேலியாவைத் தோற்கடித்தது.

நாணயச் சுழற்சியில் வென்ற அவுஸ்ரேலிய அணி துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இதன்படி கடிச் மற்றும் கில்கிறிஸ்ட் ஆகியோர் களமிறங்கினர். ஆனால், அவுஸ்ரேலிய அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சி காத்திருந்தது. முதலாவது ஓவரின் முதலாவது பந்தை வீசிய பொலக்கின் பந்தில் கில்கிறிஸ்ட் போல்டாகிடக் அவுட்டானார்.

அடுத்து பொண்டிங் இணைந்தார். ஆனால், அணி 4 ஓட்டங்களை மட்டும் பெற்றிருக்கையில், மற்றைய துடுப்பாட்ட வீரரான கடிச்சும் பொலக்கின் பந்தில் சிமித்திடம் பிடிகொடுத்து டக் அவுட்டானார். ஆரம்ப வீரர்கள் இருவரும் டக் அவுட்டாகி வெளியேற, அவுஸ்ரேலிய அணி தடுமாறியது.

அடுத்து மார்ட்டின் இணைந்தார். இவர்கள் இருவரும் பொறுப்புடன் விளையாட முயற்சித்தவேளை, 12 ஓட்டங்களை மட்டும் பெற்றிருந்த மார்ட்டின், பொலக்கின் பந்தில் போல்டானார். இதன்பின் சைமன்ஸ் இணைந்தார். எனினும், தென்னாபிரிக்க பந்து வீச்சாளர்களின் பந்துகளை எதிர்கொள்ள



முடியாத நிலையில், அவுஸ்ரேலிய விக்கெட்டுக்கள் சரிந்தன.

அடுத்து 47 பந்துகளில் 6 பவுண்டரிகள் அடங்லாக 33 ஓட்டங்களைப் பெற்றிருந்த பொண்டிங், சொண்டேகியின் பந்தில் அவிடமே பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

இதன்பின் மைக்கல் கிளார்க் இணைந்தார். ஆனால், மறுமுனையில் 9 ஓட்டங்களுடன் நின்ற சைமன்ஸின் விக்கெட்டை அன்ட்ரு ஹோல் வீழ்த்தினார். இதன்பின் ஹஸே வந்தார். எனினும், 8 ஓட்டங்களுடன் நின்ற கிளார்க்கின் விக்கெட்டும் அன்ட்ரு ஹோலால் வீழ்த்தப்பட்டது.

71 ஓட்டங்களைப் பெற்றிருந்த அவுஸ்ரேலிய அணி 6 விக்கெட்டுக்



களை இழந்து தள்ளாடியது. எனினும், ஹஸேயுடன் ஜோடி சேர்ந்த பிரெட் லீ, அணியின் சரிவைத் தடுத்து நிறுத்தினர்.

இந்த ஜோடி பொறுமையுடன் விளையாடியதால், அணியின் ஓட்ட எண்ணிக்கை அதிகரித்தது. இந்த நிலையில், அணி 194 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் 73 ஓட்டங்களுடன் நின்ற ஹஸேயின் விக்கெட்டை றூஜர் வீழ்த்த அடுத்து பிறாக்கன் இணைந்து கொண்டார்.

ஆனால், அணி 207 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் - 69 பந்துகளில் 3 சிக்ஸர்கள், 1 பவுண்டரி அடங்கலாக 57 ஓட்டங்களைப் பெற்றிருந்த பிரெட் லீ ரன் அவுட்டானார்.


இதனையடுத்து கிளார்க் இணைந்தார். ஆனால், அணி 228 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில், கிளார்க் 15, அடுத்துவந்த மக்ரா அதே ஓட்ட எண்ணிக்கையில் ரன் அவுட்டாக அவுஸ்ரேலிய அணி 49.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.

பந்துவீச்சில் பொலக் மற்றும் ஹோல் தலா 3, றூஜர் மற்றும் சொண்டேகி இருவரும தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர்.


இதனையடுத்து 229 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற நிலையில் தென்னாபிரிக்க அணியின் சிமித் மற்றும் டிப்பென்னர் ஆகியோர் களமிறங்கினர். ஆனால், தென்னாபிரிக்க அணிக்கும் முதலில் அதிர்ச்சியே காத்திருந்தது.

அணி 27 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் அடுத்தடுத்து 2 விக்கெட்டுக்கள் வீழ்த்தப்பட்டன. இதில் சிமித் 12 ஓட்டங்களுடன் மக்ராவின் பந்திலும், கலிஸ் ஓட்டமெதையும் பெறாமல் ரன் அவுட்டாகியும் வெளியேறினர்.

பின்னர் டிப்பென்னருடன் கிப்ஸ்



இணைந்தார். ஆனால், அணி 55 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் 16 ஓட்டங்களுடன் நின்ற கிப்ஸின் விக்கெட்டை பிறாக்கன் வீழ்த்தினார். இதன்பின் பிறின்ஸ் இணைந்து கொண்டார். எனினும் அவராலும் பெரிதாக ஸ்கோரை எட்டமுடியவில்லை. அவர் 19 ஓட்டங்களுடன் மக்ராவின் பந்தில் ஆட்டமிழந்தார்.



இதனையடுத்து பௌச்சர் இணைந்து கொண்டார். இவர்கள் சிறப்பாக விளையாடிக் கொண்டிருந்தவேளை, 74 ஓட்டங்களைப் பெற்றிருந்த டிப்பென்னர் ரன் அவுட்டானார். அவ்வேளை, அணியின் ஓட்ட எண்ணிக்கை 162ஆக இருந்தது.

இதன்பின் பௌச்சருடன் கெம்ப் இணைந்தார். இவர்கள் இருவரும் அவுஸ்ரேலிய பந்துகளை எதிர்கொண்டு சிறப்பாக விளையாடியதால், 48.5 ஓவர்களில் 231 ஓட்டங்களை எடுத்த தென்னாபிரிக்க அணி 5 விக்கெட்டுக்களால் அவுஸ்ரேலியாவைத் தோற்கடித்தது.

இதில் 62 பந்துகளில் 1 சிக்ஸர், 6 பவுண்டரிகள் அடங்கலாக 63 ஓட்டங்களைப் பெற்றிருந்த பௌச்சர், 21 பந்துகளில் 3 பவுண்டரிகள், 1 சிக்ஸர் அடங்கலாக 29 ஓட்டங்களைப் பெற்றிருந்த கெம்ப் இருவரும் ஆட்டமிழக்காதிருந்தனர்.

பந்துவீச்சில் மக்ரா 2, பிறாக்கன் ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

## 200ஐ தவறவிட்ட யுனுஸ்



லாகூர் —

லாகூரில் இந்திய அணிக்கு எதிரான போட்டியில் யுனுஸ் கான் 199 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். எடுக்க முடியாத ஓட்டமொன்றை எடுக்க முற்பட்டவேளை ஹர்பஜனின் குறிதவறாத எறியில் ரன் அவுட்டானார் யுனுஸ் கான். 336 பந்துகளைச் சந்தித்த இவர், 26 பவுண்டரிகளுடன் 199 ஓட்டங்களுக்கு பரிதாபமாக வெளியேறினார். டெஸ்ட் போட்டிகளில் 199 ஓட்டங்களுக்கு ஆட்டமிழக்கும் 7ஆவது வீரரானார் யுனுஸ். அந்த ஏழு பேரின் விபரம் வருமாறு -

| வீரர் | எதிரணி | இடம் | ஆண்டு |
|---|---|---|---|
| முடாசர் நாசர் | இந்தியா | பைசலாபாத் | 1984-85 |
| அசார் | இலங்கை | கான்பூர் | 1986-87 |
| எலியட் | இங்கிலாந்து | லீட்ஸ் | 1987 |
| ஜெயசூர்ய | இந்தியா | கொழும்பு | 1997 |
| ஸ்ரீவ் வோ | மேற்கிந்தியத்தீவுகள் | பிரிட்ஜ்ரவுண் | 1998-99 |
| அன்டி பிளவர் | தென்னாபிரிக்கா | ஹராரே | 2000-01 |
| யுனுஸ் கான் | இந்தியா | லாகூர் | 2006 |

## மின்னல் வேகத்திலான சதம்




லாகூர் —

இந்திய வீரர்கள் யார் பந்துவீசினாலும் அடித்து நொருக்கிறார் அப்ரிடி. இவர், ஹர்பஜனின் ஒரே ஓவரில் தொடர்ந்து 4 சிக்ஸர்கள் உட்பட 27 ஓட்டங்களை அள்ளினார். 78 பந்துகளில் சதமடித்து அதிவேக சதமடித்தவர்கள் பட்டியலில் இடம்பெற்றார். இரண்டாம் முறையாக 78 பந்துகளில் சதமடித்தார். இவருக்கு இணையாக விளையாடிய இளம் வீரர் கம்ரன் அக்மல் 81 பந்துகளில் சதமடித்தார். அதிவேக சதமடித்தவர்கள் -

| பந்துகள் | வீரர் | எதிரணி | இடம் | ஆண்டு |
|---|---|---|---|---|
| 56 | றிச்சர்ட்ஸ் | இங்கிலாந்து | செயின்ட்ஜான் | 1985-86 |
| 67 | கிரஹரி | தென்னாபிரிக்கா | ஜொகனஸ்பேர்க் | 1921-22 |
| 69 | சந்தர்போல் | அவுஸ்ரேலியா | ஜோர்ஜ்ரவுண் | 2002-03 |
| 71 | பிரடரிக்ஸ் | அவுஸ்ரேலியா | பேர்த் | 1975-76 |
| 74 | அசார் | தென்னாபிரிக்கா | கொல்கத்தா | 1996-97 |
| 74 | மஜித் கான் | நியூஸிலாந்து | கராச்சி | 1976-77 |
| 74 | கபில்தேவ் | இலங்கை | கான்பூர் | 1986-87 |
| 76 | ஜெசாப் | அவுஸ்ரேலியா | ஓவல் | 1902 |
| 78 | அப்ரிடி | மேற்கிந்திய தீவுகள் | பிரிட்ஜ்ரவுண் | 2005 |
| 78 | அப்ரிடி | இந்தியா | லாகூர் | 2006 |
| 79 | கெய்ல் | தென்னாபிரிக்கா | கேப்ரவுன் | 2003-04 |
| 79 | கெய்ல் | இங்கிலாந்து | ஓவல் | 2004 |
| 81 | கம்ரன் | இந்தியா | லாகூர் | 2006 |

## விளையாட்டு

# லாகூர் டெஸ்டின் 3ஆம் நாள் ஆட்டம் மோசமான காலநிலையால் பாதிப்பு!



லாகூல் —

இந்திய - பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் லாகூரில் இடம்பெற்று வரும் முதலாவது டெஸ்ட் போட்டியின் மூன்றாம் நாளான நேற்று மோசமான காலநிலை காரணமாக 15 ஓவர்களே பந்துவீசப்பட்டது.

நேற்றுமுன்தினம் விக்கெட் இழப்பின்றி 65 ஓட்டங்களைப் பெற்றிருந்த இந்திய அணி - நேற்று ஆட்டத்தைத் தொடர இருந்தபோதிலும் மோசமான காலநிலை காரணமாக ஆட்டம் 45 நிமிடங்கள் தாமதித்து ஆரம்பமானது.


இதன்பின் ஆட்டம் ஆரம்பமான வேளை, ஷேவாக் அதிரடியான ஆட்டத்தின் மூலம் தனது, அணியின் ஓட்ட எண்ணிக்கையை அதிகரித்தார். எனினும், 12 ஓவர்கள் வீசப்பட்ட நிலையில் இந்திய அணி 132 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் மழை குறுக்கிட்டதனால் ஆட்டம் இடை நிறுத்தப்பட்டது.

இதன்பின் மாலை 3 ஓவர்கள் வீசப்பட்டவேளை, போதிய வெளிச்சமின்மை காரணமாக மூன்றாம் நாள் ஆட்டத்தை நடுவர்கள் நிறுத்தினர். இதன்போது இந்திய அணி



விக்கெட் இழப்பின்றி 145 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இதில் 89 பந்துகளில் 20 பவுண்



டரிகள் அடங்கலாக 96 ஓட்டங்களுடன் ஷேவாக்கும், 84 பந்துகளில் 5 பவுண்டரிகள் அடங்கலாக 37 ஓட்டங்களுடன் ராவிட்டும் களத்தில் இருந்தனர்.

## பாகிஸ்தான் விருப்பம் தெரிவிப்பு

லாகூர் —

இந்திய, அவுஸ்ரேலிய அணிகளுடன் முத்தரப்பு ஒருநாள் தொடரில் மோத பாகிஸ்தான் விரும்புகிறது.

இந்தியாவில் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் சர்வதேச கிரிக்கெட் சபை நடத்தும் சம்பியன்ஸ் ட்ரொபி தொடர் தொடங்கவுள்ளது.

இதில் பங்கேற்றபின் பாகிஸ்தான் அணி, சிம்பாப்வேக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ளுமாறு சர்வதேச கிரிக்கெட் சபையின் அட்டவணை அமைத்துள்ளது.

ஆனால், தற்போது சிம்பாப்வே கிரிக்கெட் சபையில் பல்வேறு பிரச்சினைகள் நடந்து வருகின்றன. கிரிக்கெட் சபையையே சிம்பாப்வே அரசு கலைத்துவிட்டது. இதனால் இதற்குப் பதிலாக இந்திய, அவுஸ்ரேலிய அணிகளுடன் முத்தரப்பு ஒருநாள் தொடரில் மோத பாகிஸ்தான் விருப்பம் தெரிவித்துள்ளது.

# யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கான இலவச பாட நூல்கள் வந்து சேரவில்லை

யாழ்ப்பாணம் —

அரசாங்கத்தால் பாடசாலை மாணவர்களுக்கு இலவசமாக வழங்கப்படும் பாடநூல்கள் இன்னமும் யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கு வந்து சேரவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் பாடசாலை மாணவர்கள் கற்றல் நடவடிக்கைகள் மேற்கொள்வதில் பெரும் பின்னடைவை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

மாணவர்களுக்கு இலவசமாக வழங்கப்படுகின்ற பாடநூல்கள் மற்றும் சீருடைத் துணிகள் என்பன உரிய காலத்தில் வழங்கப்படாமல் இருப்பது குறித்து பெற்றோரும் பாதுகாவலர்களும் கவலை தெரிவித்தனர்

இதேவேளை தரம் 7 மாணவர்களுக்கான சமூகக் கல்வி, குடித்தொகைக் கல்வி போன்ற பாடங்களுக்கான நூல்கள் கடந்த ஆண்டிலும் முழுமையாக வழங்கப்படவில்லை. இதனால் மாணவர்கள் தமது கற்றல் நடவடிக்கைகளை மேற்கொள்வதில் பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

இதேவேளை தென்னிலங்கையில் உள்ள பாடசாலைகளுக்கு உரிய காலத்தில் தேவையான அளவு பாடநூல்கள் விநியோகம் செய்யப்பட்டு வருகின்ற போதும், வடக்கு - கிழக்கில் மட்டுமே பாடநூல்கள் விநியோகம் செய்வதில் கால தாமதம் ஏற்படுகின்றது.

அரசின் இத்தகைய செயற்பாட்டால் வடக்கு - கிழக்கில் மாணவர்களின் கல்வி நிலை பெருமளவு பாதிக்கப்படுவதோடு கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் பாடநூல் தாமதமாக கிடைப்பதால், அதிகளவு வேலைப்பளுவை எதிர்கொள்ள வேண்டியுள்ளதாக ஆசிரியர்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.



வடமராட்சி கல்வி வலய ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர் க.ஜெயானந்தம் இளைப்பாறியதையிட்டு யா/அம்பன் அ.மி.த.க பாடசாலையில் நடைபெற்ற சேவை நலன் பாராட்டு விழாவில் பாடசாலை அதிபர் பொ.சிவராசா அன்பளிப்பு வழங்கிக் கௌரவிப்பதைப் படத்தில் காணலாம். (14)

## குடிநீர் சுத்திகரிப்பு சேவை; அடிக்கல் நாட்டு விழா!

கரவெட்டி —

கரவெட்டி அத்துளு குடிநீர் சுத்திகரிப்புக்காக குவைத் செம்பிறை ஸ்தாபனத்தால் வழங்கப் பட்ட இயந்திரத்தைப் பொருத்துவதற்குரிய கட்டடத்துக்கான அடிக்கல் நாட்டும் வைபவம் கடந்த வெள்ளிக்கிழமை சம்பிரதாயபூர்வமாக அத்துளு கிராமத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வுக்கு கரவெட்டி அம்பம் அரசினர் வைத்திய சாலை அபிவிருத்திச் சபை தலைவர் உபாலி பொன்னம்பலம் தலைமை தாங்கினார்.

இந்த நிகழ்வில் முதல் அடிக் கல்லை நாடாளுமன்ற உறுப்பினர் கி.சிவநேசன் நாட்டி வைக்க, தொடர்ந்து தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கும், அபிவிருத்திக்குமான பிரதிப் பணிப்பாளர் எஸ்.பாலச்சந்திரன், மாகாண சுகாதார சேவைகள் பிரதிச் சுகாதாரப் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன், தேசிய வடிகாலமைப்புச் சபைக் கணக்காளர் ஆ.தயாபரன், ஓய்வு பெற்ற பொறியியலாளர் ந.சுந்தரமூர்த்தி முதலானோரும் அடிக்கற்களை நாட்டினர்.

நிகழ்வில் அரச அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

## வாழ்வாதார திட்டத்தின் கீழ் 36 பேருக்கு திட்ட உதவிகள்

பருத்தித்துறை —

அறவழிப் போராட்டக் குழுவின் வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் மேலும் 36 பேருக்குத் திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இதனடிப்படையில் மானியத் திட்டத்தின் கீழ் 30 பயனாளிகளுக்கு கடற்தொழிலுக்கான உதவிகளும், ஆறு பயனாளிகளுக்கு கட்டுமரம் மற்றும் வலைகளும் வழங்கப்பட்டன.

சுனாமியால் பாதிக்கப்பட்ட பருத்தித்துறை கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட கொட்டடி, சுப்பர்மடம் மற்றும் எரிஞ்ச அம்மன் கோவிலடி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த குடும்பங்களே இத்தகைய உதவிகளைப் பெற்றுக் கொண்டன.

இதுவரை 83 பயனாளிகளுக்கு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இலங்கையில் சிறுவர் பாதுகாப்பு நிறுவனத்தின் நிதி உதவியுடன் அறவழிப் போராட்டக்குழு இந்தத்திட்டத்தை அமுல் செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

## அஞ்சலக ஊழியரை கௌரவிக்க ஏற்பாடு

கரவெட்டி —

கரவெட்டி அஞ்சல் அலுவலகத்தில் தொடர்ச்சியாக 37 வருடங்கள் சேவையாற்றிய ஒரே ஒரு அஞ்சல ஊழியர் என்ற விருதைப் பெற்ற கந்தப்பு இரத்தினசிங்கம் இன்று ஓய்வு பெறவுள்ளார்.

இவர் கடந்த வருடம் உலக அஞ்சல் சேவைத் தினத்தில் சிறந்த சேவைக்கான விருதும், சேவைக்காலங்களில் ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கும் உட்படாது நன்நடத்தை பேணிக் காத்ததற்கான பாராட்டுப் பத்திரத்தையும், அஞ்சல் அதிபர் நாயகத்திடமிருந்து பெற்றுக் கொண்டவராவார்.

பொதுநல சேவையாளரான இவர் கரவெட்டி ஸ்பேர்ஸ் விளையாட்டுக் கழகம், தச்சை ஐங்கரன் சன சமூக நிலையம் ஆகியவற்றின் ஆரம்ப கர்த்தாவாவார். இந்த நிலையங்களின் தலைவராக நீண்டகாலம் சேவையாற்றியுள்ளார்.

அத்துடன் இங்கு அமைக்கப் பட்டுள்ள இந்து அறநெறிப் பாடசாலையின் வளர்ச்சியில் முன்னின்று உழைத்து வருபவர். இவரது சேவையைப் பாராட்டி இந்த நிறுவனங்கள் விழாவெடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றன. (13)

# தனியார் வாகனங்களில் படையினர்; பயணிகள், வர்த்தகர்கள் கடும் அச்சம்!

யாழ்ப்பாணம் —

யாழ். குடாநாட்டில் வீதிப் போக்குவரத்தில் ஈடுபடுகின்ற வாகனங்களை படையினர் தமது பொதிகளை எடுத்துச் செல் லப் பயன்படுத்துவதால் போக்குவரத்தில் ஈடுபடுகின்ற மக்கள் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளதாக கவலை தெரிவித்தனர்

கடந்த காலங்களில் படையினர் மீது அடையாளம் தெரியாத நபர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற தாக்குதல் சம்பவங்களை அடுத்து, படையினர் போக்குவரத்தில் ஈடுபடுகின்ற தனியார் வாகனங்களைத் தமது தேவைக்காகப் பயன்படுத்துகின்றனர்.

படையினர் தமக்கான பொருட்களை எடுத்துச் செல்லவும், கடமையின் பொருட்டு இடம் மாறவும் தனியார் வாகனங்களைப் பயன்படுத்து வதால், இந்த வாகனங்களில் போக்குவரத்துச் செய்யும் பயணிகள் அச்சத்துடன் பயணம் செய்ய வேண்டியுள்ளனர்.

இதேவேளை வீதியில் செல்லும் உழவு இயந்திரம், லொறி, வர்த்தக வாகனங்கள் போன்றவற்றையும் படையினர் பயன் படுத்துவதால், அவர்கள் தமது கடமைகளை உரிய நேரத்தில் மேற்கொள்ள முடியாத நிலையுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## சிறுவர்களுக்கான கலைப்பயில் களம்

யாழ்ப்பாணம் —

சிறுவர்களின் கலை ஆற்றலை மேம்படுத்தும் நோக்குடன் செயல்திறன் அரங்க இயக்கத்தால் சிறுவர்களுக்கான கலைப்பயில் களம் ஒன்று 2006ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

செயல்திறன் அரங்க இயக்கத்தால் முன்னெடுக்கப்படவுள்ள நுண்கலைப் பயிற்சிப் பயிலகத்தில், 8 வயது தொடக்கம் 12 வயது வரை உள்ள சிறுவர்கள் கலந்துகொள்ளலாம்.

இந்தப் பயிற்சியில் நாடகம், மிருதங்கம், நடனம், வாய்ப்பாட்டு, பாரம்பரியக் கூத்துக்கள், வயலின் வகுப்புக்கள் நடைபெறும். வட இலங்கை சங்கீத சபைப் பரீட்சைக்குத் தோற்றக் கூடியதாக இந்தப் பயிற்சிகள் வழங்கப்படும்.

நுண்கலை வகுப்புக்கள் யாவும் சனி, ஞாயிறு மற்றும் கிழமை நாட்களில் அருளகம், ஆடியபாதம் வீதி, திருநெல்வேலியில் அமைந்துள்ள செயல்திறன் அரங்க இயக்கத்தில் நடைபெறும்.

விண்ணப்பங்கள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால், பயிற்சி பெறவிரும்புபவர்கள் 30.01. 2006ஆம் திகதிக்கு முன் பதிவுகளை செயல்திறன் அரங்க இயக்க நிறுவனத்தில் மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்

## மீள் பரிசீலனைக்கு விசேட குழு அமைப்பு

நாட்டிலுள்ள அனைத்துக் கிராம அலுவலர் பிரிவுகளையும் மீள் பரிசீலனை செய்ய விசேட குழுவென்று நியமிக்கப்பட்டுள்ளது.

கிராம அலுவலர் பிரிவுகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய மாற்றங்கள் தொடர்பாக பொது மக்களின் கருத்துக்களை அறிந்து கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக நியமிக்கப்பட்ட 12 பேர் அடங்கிய இந்தக் குழுவுக்கு முன்னாள் அமைச்சின் செயலாளர் ஒருவர் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

எதிர்வரும் மார்ச் சமாதம் இறுதிவரை இது தொடர்பாக பொதுமக்களின் கருத்துக்கள் பெற்றுக்கொள்ளப்படவுள்ளன.

## பாதிக்கப்பட்ட கடற்தொழிலாளருக்கு உலருணவு நிவாரணம் விநியோகம்

யாழ்ப்பாணம் —

யாழ். குடாநாட்டில் கடற்தொழிலாளர்களுக்கு இலவச உலர் உணவு நிவாரணம் வழங்குவதற்கான ஆரம்பக்கட்ட நடவடிக்கைகளை யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஷ் மேற்கொண்டுள்ளார்.

வடமராட்சிவடக்கு வேலணை, பருத்தித்துறை, சங்கானை, சண்டிலிப்பாய் ஆகிய பிரதேச செயலாளர்களுக்கு இது தொடர்பான சுற்றறிக்கையொன்றை அர சாங்க அதிபர் அனுப்பி வைத் துள்ளார்.

இந்தச் சுற்றறிக்கையில் - மீன்பிடிப்பதற்குத் தடைசெய்யப்பட்ட பிரதேசங்களையும், பாதிக்கப்பட்ட குடும்பங்களின் விபரங்களையும், மீன் பிடிப்பதற்கு பயன்படுத்தப்படும் படகுகள், கட்டுமரங்கள், தும்பு, கண்ணாடி இழைப்படகுகள் ஆகியவற்றின் விபரங்களையும், பாவிக்கப்படும் பிரதேசங்கள் குறித்தும் உடனடியாக அனுப்பி வைக்குமாறும் கோரப்பட்டுள்ளது.

## ஆரம்பப் பாடசாலைகளில் 'கண்மணிக் குட்டியர்' நாடகம்

யாழ்ப்பாணம் —

செயல்திறன் அரங்க இயக்கத்தால் யாழ்.மாவட்டத்தில் உள்ள ஆரம்பப் பாடசாலைகளில் குழந்தை ம.சண்முகலிங்கத்தின் "கண்மணிக் குட்டியர்" சிறுவர் நாடகம் மேடையேற்றப் படவுள்ளது.

வளரும் பயிருக்கு முளையில் உதவும் சிறுவர் அரங்கச் செயற்பாடுகளை செயல்திறன் அரங்க இயக்கமானது முன்னெடுத்து வருகின்றது. சிறுவர் அரங்கிற்கான நாடகங்களான - பஞ்சவர்ண நரியார், பந்தயக்குதிரையார், மந்திரத்தால் மழை போன்ற நாடகங்களை இந்த நிறுவனம் யாழ்.மாவட்டத்தில் உள்ள ஆரம்பப்பாட சாலைகளிலும் கொழும்பு, உட்பட வெளிமாவட்டங்களிலும் மேடையேற்றியமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை கண்மணிக் குட்டியார் சிறுவர் நாடகமானது யாழ்.மாவட்டத்தில் உள்ள சிறுவர் பாடசாலைகளில் இந்த மாத இறுதிக்குள் மேடையேற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்தச் சிறுவர் நாடகமானது ஆரம்பப் பாடசாலை அதிபர், ஆசிரியர், மாணவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமையும் எனக் கூறப்படுகிறது.

பாடசாலைகளில் மேடையேற்ற விரும்பும் ஆசிரியர்கள் மேடையேற்ற அனுமதிகளை அருளகம், ஆடியபாதம் வீதி, திருநெல்வேலியில் இயங்குகின்ற செயல்திறன் அரங்க இயக்கத்துடன் தொடர்பு கொண்டு மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

## பொங்கல் நாளன்றும் படையினர் சோதனை

தெல்லிப்பளை —

தெல்லிப்பளை, மல்லாகம், சித்தியம் புளியடி, துர்க்காபுரம் ஆகிய பகுதிகளில் பொங்கல் நாளன்றும் இராணுவத்தினர் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

காலையில் பொங்கல் பானை வைத்து பொதுமக்கள் பொங்க முயன்ற போதிலும், இராணுவத்தினர் வீடுகளுக்குச் சென்று சோதனையிட்டமையால் மக்களிடத்தில் பதற்ற நிலைமை காணப்பட்டது. மல்லாகம் சந்தியில் கடந்த வெள்ளிக் கிழமை இராணுவத்தினர் மீது நடத்தப்பட்ட தாக்கு தலையடுத்து அச்சம் காரணமாக பொதுமக்கள் பொங்கலுக்கான பொருட்கள் வாங்கச் செல்லவில்லை.

பொருட்களை பொங்கலன்று காலையில் வாங்கச் செல்ல முற்பட்டவர்களை இராணுவத்தினர் தடுத்து நிறுத்திச் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டமையால், காலம் தாழ்த்தியே பொருட்களை வாங்க முடிந்தது.

சூரியன் உதிக்கும் நேரத்தில் பொங்கிப் படைக்க வேண்டிய மக்கள் இராணுவத்தினரின் இந்தத் தேடுதல் நடவடிக்கையால் நண்பகல் அளவிலேயே பொங்கல் பொங்கிக் கொண்டாடினர்.



# பத்து இலட்சம்

சிறுகதை

தென்றல் தெம்மாங்கு பாடி மனதைக் குளிரவைக்கும் மலையடிவாரம் என்ற கிராமத்தில் நிலத்தோடு தினம் தினம் போராடும் ஏழை விவசாயக் குடும்பத்தில் சாருமதி என்ற அழகான பெண்ணொருத்தி இருந்தாள். கல்விக்குப் போடப்பட்டிருந்த முள்வேலிகள் யாவும் தாண்டி கல்லூரியில் பட்டப்படிப்பினைப் படித்து வந்தாள். அவளது சிவந்த மேனியும், சிரித்த வசீகரமான முகமும், மயிற்தோகை போன்ற கூந்தலும், மெல்லிசைக் காற்றில் அசைந்தாடும் இடையும், கல்வியின் திறமையும் கல்லூரி மாணவர்களை வியக்க வைத்து அவள் மீது கண்ணெறியத் தொடங்கினார்கள்.

சகபாடிகளுடன் கலகலப்பாக பேசும் அந்தக் காரிகை மீது கௌசிகன் என்ற கட்டழகுக் காளைக்கு ஒரு கண். அவளை எப்படியாவது தான் அடைய வேண்டும் என்ற ஆசை அவன் மனதை பலமுறை அலைக்கழிய வைத்த சந்தர்ப்பங்கள் உண்டு.

ஒருநாள் கௌசிகன் சாருமதியின் தோழி ஜினோவிடம் சாருமதி பற்றி விசாரித்தான்.

குட்மோனிங் என்றான் கௌசிகன்.

உங்களிட்டை ஒன்று கேட்கிறேன் கோவிச்சிடாதேங்கோ, என்று கூறியவாறு சாருமதியின் தோழி ஜினோவிடம் சாருமதி பற்றிய விபரங்களை அறிந்தான் கௌசிகன்.

சாருமதியின் சொல்லமுடியாத மேன்மைகளை ஜினோ வாயிலாக அறிந்த கௌசிகனுக்கு, அவளை எப்படியாவது கைப்பிடிக்க வேண்டும் என்ற எண்ணத்துக்கு மேலும் பல வலுக்கள் சேர்க்கப்பட்டது.

சாருமதியை கைப்பிடிக்க வேண்டும் என்ற ஆசையில் திரிந்த கௌசிகனுக்கு அதிஷ்டம் தேடி வருவதுபோல கல்லூரி கலைவிழாவும் தேடி வந்தது. அக்கலை விழாவில் சாருமதி நாட்டியம் ஆடுவது வழமை. ஆகையால் நட்டுவாங்கம் வாசிப்பதற்காக கௌசிகனிடம் செல்கிறாள் சாருமதி.

ஹலோ, கௌசிகன் குட்மோனிங் என்றாள் சாருமதி.

சாரு, உங்களுக்குச் செய்யாது யாருக்கு செய்வது என்று கௌசிகனின் வசனங்கள் வங்காள விரிகுடாபோல விரிந்துகொண்டே சென்றது.

அவனது மிருதங்கத்திறமையும் கனிவான வார்த்தைகளும் சாருமதியை திசை திருப்பியது. மென்மையே இயல்பான சாருமதியால் ஏதும் இயம்ப முடியாமல் வாடி வதங்கினாள்.

இதைக் கண்ட தோழி ஜினோ, சாரு ஏ... ஏன் ஒரு மாதிரியாய் இருக்கிறாய்?

ஆ...புரியுது.நட்டுவாங்கத்திலை மயங்கிட்டாய் போல, என்றாள் ஜினோ தமாசாக.

ஓம்.. எடி ஜினோ, கௌசியின்ரை நட்டுவாங்கத்திலை காலம் பூராய் மயங்கணும்போல இருக்குது என்றாள் சாருமதி.

சாருமதியின் ஆசைகளையும் அவலங்களையும் சகித்துக்கொள்ள முடியாத ஜினோ கௌசிகனிடம் செல்கிறாள்.

ஹலோ, கௌசிகன் என்றாள் ஜினோ.

எங்கிட்ட இந்தப் பக்கம் என்ன விசயம் என்றான் கௌசிகன்.

சும்மாதான் என்றாள் ஜினோ.

புரியுது, புரியுது, நல்லாய்ப்புரியுது என்றான் கௌசிகன் மெல்லிய சிரிப்போடு.

பரீட்சை வருகுது போல ரியூட் தேவை தானே.

சீ, அதெல்லாம் இப்ப வேண்டாம்.

அப்ப என்ன வேணும் ஜினோ?

இல்லை கௌசி, சாருமதி உனக்காக என்று சாருவின் நிலைமை பற்றி விபரித்துக் கொண்டே சென்றாள் ஜினோ. சாருவின் கதையைக் கேட்கக் கேட்கக் கௌசிகனுக்கு வெந்த புண்ணில் மயில் இறகு படுவதுபோல ஒரு வகை இன்பம் அவன் உள்ளத்தில் நீந்தியது.

ஜினோ சொல்லுங்கோ சொல்லுங்கோ... என்று கேட்டுக் கொண்டு இருந்தான். ஆனந்தம் அவன் உள்ளம் எங்கும் மின்சாரம் போலப் பாய்ந்ததால் துள்ளிக் குதித்துக் கொண்டு ஓடினான் கௌசிகன்.

ப்ளீஸ்.. இந்த பொக்கேயை சாருவுக்கு கொடுங்க.

கௌசி ஏய் இதென்ன?

அது.. அது.. சாருவுக்கு என்றான்.

சந்தோஷப்பட்ட ஜினோ தாங்க, தாங்க என்று முகம் மலர்ந்து வேணடினாள். பொக்கேயை வேண்டிய ஜினோ பத்திரமாக தனது கூடைக்குள் வைத்துக்கொண்டு தனது அறைக்குள் சென்றாள்.

சாரு, இந்தா உனக்குத் தான், என்ன பிஸ்கட்டா என்றாள் சாருமதி.

சீ.. போடி சாரு.. அது உனது கௌசிகன் தந்த காதல் பரிசு என்றாள்.

சொல்லி முடிவதற்குள் சாருமதி பொக்கேயை வேண்டினாள்.

என்ரை கௌசிக்குட்டி என்று மார்போடு அணைத்து முத்தமிட்டாள் சாருமதி.

பொழுதும் மாலையாகிவிட்டது. கௌசிகனும் பாடங்களை படிக்க என்று மேசைப் பக்கம் சென்றான். புத்தகத்தை விரித்ததும் சாருவின் எண்ணங்கள் ஊஞ்சல் ஆடியது. குழப்பம் அடைந்த கௌசிகன் தலையணையை இறுகக் கட்டிக் கொண்டு தூங்கினான்.

தூக்கம் எப்படி வரும்? அங்கும் இங்குமாய் புரண்டு புரண்டு விழித்திருந்தான். நேரமோ இரண்டு மணியை கடந்துவிட்டது. ஒருவாறு கண் தூங்கும்போது சாருவின் கனவுகள் அவனை வருடியது.

பொழுதும் விடிந்தது. காலைக் கடனை முடித்துவிட்டு சைக்கிளை மிதித்துக் கொண்டு சாருவிடம் செல்கின்றான் கௌசிகன்.

டிங்... டிங் என்று வாசலில் நின்று பெல் அடித்தான். (யாரும் வரவில்லை பதில் ஏதும் இல்லை பின்பு)

ஜினோ...

ஜினோ என்று கூச்சலுடன் கூப்பிட்டான்.

சீ.... யார்? இந்த விடியக்காலையிலை என்று சினந்துகொண்டு வந்து வெளியில் எட்டிப் பார்த்த போது கௌசிகன் நிற்பதைக் கண்டாள் ஜினோ. வாங்க... வாங்க என்று வரவேற்புரை வாசித்துக் கொண்டு சாரு.. சாரு என்று படுக்கையறைக்கு ஓடினாள் ஜினோ.

ஜினோவின் சத்தத்தில் மருண்ட சாருமதி

என்னடி? என்றாள்.

இல்லை என்னோட வா என்று அவளை இழுத்துக் கொண்டு வெளியிலே வந்தாள்.

கௌசிகனைக் கண்ட சாருமதி செய்வதறியாது திகைத்து நின்றாள்.

ப்ளீஸ் கௌசி என்னை மன்னித்திடுங்க என்றாள் சாருமதி.

ஏன் சாரு உன்னை மன்னிக்க வேண்டும். என்ன தப்பு செய்துவிட்டாய்? உலகில் நடப்பது தானே நடந்தது என்று சாருமதியின் திகைப்பை தேற்றினான் கௌசிகன்.

இவ்வாறாக அல்லும் பகலும் சாருவைப் பார்த்து இனிதே பொழுதைக் கழித்து சாரு மனதில் பிரிக்க முடியாமல் இடம் பிடித்தான் கௌசிகன். இவர்களது நட்பைக் கண்டவர்கள் கல்லூரி எங்கும் பறையடித்தார்கள். கல்லூரிப் படிப்பும் உச்சக் கட்டத்தை எட்டிநின்றது.

கௌசிகனின் நண்பர்கள் அரையும் குறையுமாக புறளிப் பேச்சுக்கள் பேசி அவளது அன்புக்கு சிவப்புக் கொடி காட்டி, காசு என்ற சீதனத்துக்கு பச்சைக்கொடி காட்டினர். இவர்கள் பேச்சுக்கு மனம் மாறாத கௌசிகன் காசு என்ற சீதனத்துக்கு சிவப்புக் கொடியையே காட்டினான்.

போதாக் குறைக்கு கௌசிகனின் தாய் - தந்தை - சகோதரர்கள எல்லோரும் சேர்ந்து உன்னைக் கஷ்ரப்பட்டு படிப்பிச்சு என்ன பலன்? ஏதும் இல்லாத ஏழைப்பெண்ணுக்கு அடிமைப்பட்டுப் போனாய் என்று தினம் தினம் புறளிப் பேச்சுக்கள் பேசி பத்து இலட்சம் வேண்டித்தான் நீ திருமணம் செய்ய வேண்டும் என்று கட்டாயப் படுத்தினார்கள். பொறுக்காத கௌசிகன் செத்துத் தொலையலாம் என்ன இந்த மனிதர்கள்? காசை வைத்து என்ன செய்யிறது? கட்டையிலை போகேக்கே கட்டிக் கொண்டு போகவா? என்று சீதனப் பேய்களுக்கு வெடி வைத்தான்.

இவ்வாறு கௌசிகன் வீட்டில் தினம் தினம் கலகங்களும், வாய்த் தர்க்கங்களும் நடந்தது. இதனால் கௌசிகனை காசு என்று சீதன வாதத்திற்கு வசைப்படுத்திக் கொணடனர். சாருமதிமேல் வைத்த காதலும் கசக்கத் தொடங்கி காசுதான் அவனுக்கு கண்கண்ட தெய்வமாக தெரிந்தது.

தினம் தினம் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கும் கௌசிகனின் கடிதங்களைக் காணாது பல கடிதங்கள் போட்டும் பதில் ஏதும் காணாத சாருமதி கௌசிகனுக்கு என்ன நடந்தது? என்று அறிவதற்காக கௌசிகனைத தேடி வீட்டுப் பக்கம் வருகிறாள்.

கௌசிகன் கௌசிகன் என்று கூப்பிட்ட சாருமதிக்கு வாம்மா... வாம்மா என்று கௌசிகனின் தாயார் வரவேற்புக்கீதம் பாடினார்.

ஏம்மா நீ இந்தப் பக்கம் நீயாரம்மா?

நான் யாருமல்ல கௌசியோட பிரண்ஸ் சாருமதி என்றாள்.

என்ன சாருமதியோ....? அந்தப் பைத்தியக்காரி நீதானா? என்றாள் கௌசிகனின் தாயார்.

என்ன செய்வதென்று அறியாத சாருமதி பெட்டிப் பாம்பாக அடங்கிப்போய் மௌனமாக நின்றாள்.

என்ரை பிள்ளையின்ரை தரத்துக்கும் அந்தஸ்துக்கும் நீ ஒரு கால் துடைப்பம். நீ வந்து என்ரை மகனை கட்டிக்கப் போற அறுதலியா? நடக்கவே நடக்காது. நீ எனக்கு மருமகள் அல்ல, என்று கூடாத வார்த்தைகளால் திட்டித் தள்ளினாள் கௌசிகனின் தாயார். இத்தனை பேச்சிற்கும் வாய்பேசாத சாருமதி எங்கேயோ வேர்த்துக் களைத்து வந்த கௌசிகனை கணடாள்.

கௌசி.. என்று அவன் அருகில் ஓடினாள் சாருமதி. கௌசிகன் பிடித்து வைத்த பிள்ளையார் போல மலைத்துப்போய் நின்றான்.

என்ன கௌசி? உனக்கு என்ன நடந்தது? சொல்லு சொல்லு... என்று கௌசிகனைப் பிடித்து உலுப்பினாள்.

அது ஒன்றும் இல்லை. நீ என்னைக் கல்யாணம் கட்டுறதாய் இருந்தால் பத்து இலட்சம் தா? இல்லையேல் வேறையாளைப் பார்த்துக்கோ என்றான் கௌசிகன்.

ஆத்திரம் கொண்ட சாருமதி பணத்துக்காகவா என்னைக் கல்லூரியில் காதலித்தாய்?

ஆசையைக் காட்டி அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்லும் துரோகியே? உனக்கு எந்தப் பெண்ணும் கிடைக்கக் கூடாது. என்று சாபம் இட்டுக் கொண்டு வெம்பி வெம்பி அழுதுகொண்டு தனது வீடு நோக்கிச் சென்றாள் சாருமதி.

சாருமதியின் சோகத்தைப் புரிந்துகொண்ட பெற்றோர் என்ன நடந்தது என்று கேட்டபோது..

விம்மியவாறு பதில் கூறினாள் சாருமதி.

பத்து இலட்சமா? எனத் தலைமேல் கை வைத்து ஏங்கினார்கள் பெற்றோர். ஐயோ என்ன செய்வது? என்னைப்போல் பெண்களைப் பெற்றவர்கள் என்று புலம்பினார்கள்.

நீ கவலைப்படாதேயம்மா? உனைக் கட்டிக்க ஒருவன் வருவான். அதற்கு அந்த ஆண்டவன் அருள் தருவான். என்று அவளுக்கு ஆறுதல் கூறினர்.

வேண்டாம் அப்பா இந்த வாழ்க்கை. காசுக்கு அன்பு காட்டும் உந்தக் காடையர்களோடு சேர்ந்து வாழ முடியாது. உழைத்து தன்மானத்தோடு வாழத் தெரியாத உந்தச் சோம்பேறி மாடுகளுக்கு நாங்களா பிண்ணாக்கு? இல்லை. பிறரை வதைத்து பெண்ணைக் கேட்கும் மூடனோ? இல்லை இல்லை இல்லை உள்ளங்கள் இரண்டு உருகிச் சேர்வதுதான் கலியாணம். காசுக்கு கலியாணமா? அது கடைத தெருவில் வேண்டாம்.

இந்த வாழ்க்கை என்று விரக்தியின் விளிம்பில் தத்தளித்துக் கொண்டு விம்மி விம்மி அறைப்பக்கம் ஓடினாள் சாருமதி.



# தேவை

அந்த இடத்திற்கு பாஷோ தனது மாணவர்களுடன் வந்திருந்தார்.

தூரத்தில் ஒரு பெரிய சுவர் இருந்தது. சுவருக்கு அப்பால் உள்ள மரத்தில் நல்ல கனிகள் இருந்தன.

பாஷோ தனது மாணவர்களை நோக்கி, "நான் சொல்லும்வரை இந்த இடத்தில் தான் நீங்கள் இருக்க வேண்டும்... உங்கள் விருப்பத்திற்கு என்ன வேண்டுமானாலும் செய்யுங்கள்.. பசித்தால் அதோ அந்த மரத்தில் இருக்கும் கனிகளைப் பறித்துச் சாப்பிட்டுக் கொள்ளலாம்..." என்றார்.

மெல்ல மெல்ல நேரம் கடந்தது.

அதிகாலையிலேயே வந்துவிட்டதால் மாணவர்களுக்குப் பசிக்க ஆரம்பித்துவிட்டது.

மாணவர்கள் திரும்பி அந்த மரத்தைப் பார்த்தார்கள். கனிகள் நன்கு பழுத்துக் கிடந்தன. ஆனால், அந்த பெரிய சுவர் தடையாக இருந்தது. சுவரைத் தாண்டித்தான் போய் கனிகளைப் பறிக்க முடியும். அவ்வளவு பெரியசுவரை ஏறி எப்படித் தாண்டுவது? என்று எல்லோரும் யோசித்தார்கள். பசிதானே கொஞ்சம் கட்டுப்படுத்திக் கொண்டால் போயிற்று என்று அமைதியாக இருந்தார்கள்.

நேரம் போய்க்கொண்டிருந்தது. மதிய உணவு நேரமும் வந்தது. மாணவர்களுக்குப் பசிபயங்கரமாக இருந்தது. பாஷோவைப் பார்த்தார்கள். அவர் இப்போது கிளம்புகிற மாதிரி இல்லை. மௌனமாக இருந்தார்.

மாலை நான்கு மணி ஆயிற்று.

மாணவர்கள் பசியால் துடித்தார்கள். இதற்கு மேல் பசிதாங்க முடியாது என்று ஒரு மாணவன் நினைத்தான். திரும்ப மரத்தைப் பார்த்தான். கனிகளைப் பார்த்தான். பாய்ந்து ஓடினான். அந்தப் பெரிய சுவரின் மேல் சுலபமாக ஏறி மரத்தின் கிளைகளைப் பற்றினான். கனிகளைக் கொய்தான். சாப்பிட்ட பிறகுதான் அவனுக்குச் சுயநினைவே வந்தது. அவ்வளவு பசி.

மெல்ல அவன் இறங்க, ஒவ்வொருவராக அவனைத்தாண்டி சுவர் மேல் ஏறி கனிகளைப் பறித்து பசியாறினார்கள்.

பாஷோ எல்லாவற்றையும் பார்த்துவிட்டு முதலில் ஏறிப் பறித்தவனை கூப்பிட்டார்.

"அந்தத் திசையில் காலையில் பார்த்தபோது என்ன தெரிந்தது?"

"பாதை, சுவர், மரம், கனிகள்"

"அதே திசையில் மாலையில் பார்த்தபோது என்ன தெரிந்தது?"

"கனிகள் மட்டும் தான்..."

"காலையிலும் மாலையிலும் உனக்கு ஏற்பட்ட வித்தியாசம் என்ன?

பசி ஒன்றுதான்... காலையில் பசி குறைவாக இருந்தது... மாலையில் பசி அதிகமாக மிக அதிகமாக இருந்தது."

பாஷோ புன்னகைத்தார்.

தனது கரும்பலகையில் எழுதினார்.

காலையில் தெரிந்த சுவர் மாலையில் தெரியவில்லை காரணம் தேவை.

தேவை அதிகமாக அதிகமாக தடைகள் கண்ணிலிருந்து மறைந்து இலக்கு மட்டும்தான் தெரியும்.

கனிகளைப் புசிக்கவேண்டுமென்றால் உங்களிடம் பசி இருக்க வேண்டும்.

தேவைகளை உருவாக்கிக் கொள்ளுங்கள் வெற்றியடைவது சுலபமாக இருக்கும்.

# மனதில் துருத்தும் கருப்பொருளுக்கு ஏற்பவே எழுதுவது - எனக்குத் திருப்தியாகிறது

இலக்கிய வடம் பிடித்து இழுத்த தொடரில் தானும் நின்று திரிவுபட விடாமல் படைப்புக்களைப் படைத்து இன்றுவரை எழுதிக் கொண்டிருக்கும் நவாலியைப் பிறப்பிடமாகவும், வண்.வடமேற்கு பேச்சி அம்மன் கோவிலை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிராசா பரமலிங்கம் என்பவரைச் சந்தித்து பத்திரிகைக்கான நேர்காணல் ஒன்றை மேற்கொண்டபோது பகிர்ந்துகொண்ட வார்த்தைகளை இலக்கிய வாசகர்களுக்காகத் தருகின்றேன்.



தம்பிராசா பரமலிங்கம்

**கேள்வி:- இலக்கியப்படைப்புலகில் நுழைந்ததற்கான காரணமாக அமைந்த விடயங்கள் பற்றிக் கூறுங்கள்?**

*பதில்:* சமுதாய மாற்றத்துக்காக வர்த்தக ரீதியில் சுரண்டப்படுகின்ற, ஒடுக்கப்படுகின்ற மக்களின் விடிவுக்காக என்று சொல்வேன் என்று நீங்கள் எதிர்பார்ப்பீர்கள். அதெல்லாம் ஒண்டுமேயில்லை. அதெல்லாம் பிற்காலத்தில்... இப்பொழுதெல்லாம் இருப்பது உண்மைதான்.

ஆரம்ப காலத்தில் என்னை வளர்த்தது காதல்தான். இரண்டாம் வகுப்பையே நவாலி சென். பீற்றர் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையில் முடித்துக் கொண்டு வெளியேறிய நான் எமது பரம்பரைத் தொழிலைக் கற்று கடைகளில் சாதாரண தொழிலாளியாக இருந்த காலங்களில் பத்திரிகைகளில் வெளிவரும் கவிதைகளை கொப்பியில் அழகாக எழுதி வைக்கும் பழக்கம் இருந்தது.

கொழும்பு தெமட்டகொட பேஸ்லைன் வீதியில் கடையொன்றில் அறுபதாம் ஆண்டு நின்ற சமயம் என்னுடன் தொழிலாளியாக இருந்த முஸ்லிம் தொழிலாளி ரியாஸ் என்பவர் போஸ்க் காட் ஒன்றில் கேள்வி ஒன்றை எழுதி கண்முன்னாலேயே தினகரன் கேள்வி பதிலுக்கு அனுப்பி வைத்தார்.

அதற்கான பதிலுடன் அடுத்த வாரமே தோழரின் பெயருடன் கேள்வியும், பதிலும் பத்திரிகையில் வெளிவந்திருந்தது.

அதனைப் பார்த்து நானும் கேள்வி பதில், நேயர் கடிதங்கள் எனப் பத்திரிகைகள், சஞ்சிகைகள், வானொலி நிகழ்ச்சிகளுக்கு நவாலியூர் த.பரமலிங்கம் என்ற பெயரில் எழுதிக்கொண்டிருந்தேன். அறுபதுகளின் ஆரம்ப காலங்களில் தினகரன், வீரகேசரி,சுதந்திரன் மேலும் அப்போது வெளிவந்துகொண்டிருந்த சஞ்சிகைகளில் எனது பெயர் அடிக்கடி பிரசுரமாகிக் கொண்டிருந்தது.

1962 இல் சுதந்திரன் வளர்மதி பகுதியில் எனது முதலாவது கவிதையும், 1965 இல் முதல் சிறுகதையும் பிரசுரம் பெற்றன. அவ்வேளை எனக்கு 17 வயது.

காதல் கடுக்காணும் வயது. எனவே சாதாரண தொழிலாளியாக இருந்தால் எந்தப் பெண்ணும் என்னை ஏறெடுத்துப் பார்க்க மாட்டாள் எனும் தாழ்வு மனப்பான்மையும் இருந்ததால் ஒரு எழுத்தாளன், கவிஞனாக என்னை வளர்த்துக் கொள்ளும் தேவை, உந்துதல் காரணமாக அமைந்ததாலேயே படைப்பாளியாக நான் உருவாகும் நிலை ஏற்பட்டது.

**கேள்வி:- இலக்கியத் துறையில் கவிதை, சிறுகதை, நாவல், நாடகம் எனப் பல துறைகளிலும் எழுதி வருகிறீர்கள். இதற்குள் திருப்தியடைந்த பகுதி எது? அதைப் பற்றிக் கூறுங்கள்?**

*பதில்:* நான் இன்னமும் பெரிதாக எதனையும் சாதித்து விட்டதாகக் கருதவில்லை. அதனால் எனக்கு இன்னமும் திருப்தி ஏற்படவில்லை. இன்னமும் அந்தந்தத் துறைகளில் நிறையச் செய்ய வேண்டுமென்ற அவாவே இருக்கிறது.

கவிதைகள் ஆயிரக் கணக்காகவும், சிறுகதைகள் 75 வரையும், நாவல்கள் மூன்றும், நாடகங்கள் 20 வரையும், கட்டுரைகள் 50 இற்கு மேலாகவும் எழுதி இதுவரை பல பரிசில்களையும் பெற்று 20 இற்கு மேற்பட்ட சான்றிதழ்கள், இரண்டு வெற்றிக் கிண்ணங்கள், இரண்டு பதக்கங்கள், பணப் பரிசில்களும் பெற்றுள்ளேன். ஆயினும் என்னால் இயங்கும்வரை எழுதுவது நின்றுவிடாது.

மனதில் துருத்தும் கருப்பொருளுக்கேற்ற துறையை எடுத்துக் கொண்டு அதனில் எழுதுவதே எனக்குத் திருப்தியானது.

**கேள்வி:- உங்களைப் பாதிப்படைய வைத்த எழுத்தாளர்களின் படைப்புக்கள் பற்றி...?**

*பதில்:* சிறுகதை, நாவல் துறைகளில் என்னை வெகுவாகப் பாதித்தவர் அமரர் கே.டானியல். அவரது முதல் நூலான டானியல் கதைகள் வாசித்து முடித்த அருட்டுணர்வுடனேயே சிறுகதை எழுத ஆரம்பித்தேன்.

அதேவேளை எஸ்.போ., யோ.பெனடிற்பாலன், டொமினிக் ஜீவா, அ.ந.கந்தசாமி, நீர்வை பொன்னையன், டானியல் அன்ரனி, வ.அ.இராசரத்தினம் போன்றவர்களின் எழுத்துக்களும் எனக்கு மிகவும் பிடிக்கும்.

கவிதைத் துறையை எடுத்துக்கொண்டால் அமரரான சில்லையூர் செல்வராசனின் கவியரங்கக் கவிதைகளைக் கேட்டுத்தான் கவிதை எழுதும் ஆர்வம் தோன்றியது என்பேன். என்னை மரபுக் கவிதைகளில் வழிப்படுத்தியவர்கள் அமரர் மதுர கவி இ.நாகராஜன், தற்பொழுது வெளி நாட்டில் வாழும் கவிஞர் வி.கந்தவனம் இவர்களுடன் அதிக கவியரங்குகளில் பங்கேற்றுள்ளேன்.

மஹாகவி, இ.முருகையன், புதுவை போன்றவர்களின் கவிதைகளில் நாட்டம் உண்டு.

**கேள்வி:- இலக்கியத்துறையில் நீங்கள் பெற்ற பரிசுகள் எவை? எதற்காக வழங்கப்பட்டது?**

*பதில் :* இதற்குப் பதில் சொல்வதானால் இந்தக் கட்டுரை முடிந்துவிடும். சுருக்கமாக முன்னதாகவே கூறியுள்ளேன். ஆயினும் போட்டிகளை நடத்திவிட்டுப் பரிசளிக்காத சம்பவங்களை இவ்விடத்தில் தெரிவிக்கலாமென எண்ணுகிறேன்.

1976 ஆம் ஆண்டு கல்முனை முத்தமிழ்க் கழகம் அகில இலங்கை ரீதியில் நடத்திய அமரர் நீலாவணன் கவிதைப் போட்டியில் மூன்றாவது பரிசு. அதே காலப்பகுதியில் கலசம் மாத இதழ் நடத்திய கவிதைப் போட்டியில் 1ஆம் பரிசு.

2001 ஆம் ஆண்டு இந்து சமயப் பேரவை நடத்திய நேரடிக் கவிதைப் போட்டியில் கவிமணி விருதுக்கான பரிசு. இவை இன்னமும் எட்டப்படாதவையாக இருக்கிறது.

இலக்கியப் போட்டிகளுக்கு கட்டணம் வசூலித்தும், போட்டிகளை நடத்தாமல் கைவிட்ட அமைப்புகளும் உண்டு. கோப்பாய் செஞ்சிலுவைச் சங்கம் என்னிடம் 50 ரூபாவைக் கட்டணமாகப் பெற்றுக்கொண்டு இன்னமும் போட்டியை நடத்தாமல் கடத்திக் கொண்டிருப்பதையும் குறிப்பிடலாம்.

1984 இல் தாரகை இலக்கிய இதழ் அமரர் செ.கதிர்காமநாதன் நினைவு சிறுகதைப் போட்டியில் அகில இலங்கை ரீதியில் முதற்பரிசு பெற்றேன். சர்வதேச மாணவர் பேரவை நடத்திய 2005 ஆம் ஆண்டு கரும்புலிகள் தின நினைவுக் கவிதைப் போட்டியில் தேசிய மட்டத்தில் முதற்பரிசு.

**கேள்வி:- உங்கள் கவிதை நடை புதுக் கவிதையா? மரபுக் கவிதையா? ஏன் அதை விரும்புகிறீர்கள்?**

*பதில்:* மரபு வழிக் கவிதைகளைப் படைப்பதையே பெரும்பாலும் விரும்புகிறேன். புதுக் கவிதையையும் வெறுக்கவில்லை. அது வேறு, இது வேறு ஊடகங்கள். அந்தந்த வடிவங்களைச் செவ்வனே செய்தால் பிரச்சினையில்லை. புதுக் கவிதைக்குப் படிமம் என்ற ஒன்றை இலக்கணமாகக் கொள்வதால் அதுவும் மரபுக்குட்படுகிறது. அந்தப் படிமத்தை சரிவரப் புரிந்து கொள்ளாதவர்களால் புதுக் கவிதை எழுதப்படுவதால் அதன் வடிவம் கெட்டுவிடுகிறது. (தொடரும்)

## இலக்கியம் - அடுத்த சந்ததியினருக்குத் தெரியப்படுத்தும் அன்றைய நிகழ்வாக இருக்கவேண்டும்.

கலவைகள் கொண்ட பொருட்களின் அழகுத் தன்மை அதன் வடிவமைப்பில் உருவகிக்கப்படுகிறது. அதேபோல் விரும்புகின்ற பிடிப்பில் எல்லோருடைய பாவனையை வெளிப்படுத்துகின்றதுபோல் சுவையுள்ள இலக்கியம் கருத்துகளுக்குள் அமையாது. சுவைக்குள் கருத்து அமைந்து விடுகின்ற தன்மையே எல்லோராலும் எழுதப்பட்டும், பேசப்பட்டும் நடைமுறையில் கொண்டுவரப்பட்டுள்ளது.

இதையே நாம் கற்கைநெறி மூலம் அறிந்துகொண்டு அதனையே சரிஎன்றும் வாதிடிகின்றபோது - படித்த அறிவின் எல்லையைத் தாண்டவில்லை என்பதும் தெரிகின்றது. பின்பற்றல் அவர்களோடு ஒத்தோடுதலாகும். ஆகவே இப்படித்



தான் என்ற தன்மை மாறுபடவேண்டிய சூழ்நிலை, எம்மை வளர்த்துக்கொள்ள வேண்டிய கட்டாயம் இனிவருகின்ற இலக்கியப் படைப்புகளுக்கு ஏற்படுகின்றது.

மாற்றங்களில் கருத்துக்கள் இல்லாமல் வடிவங்களில் மட்டும் புதுப்பிக்கப்படுகின்றபோது, தலைமுறையின் வேண்டுதலுக்கும் விருப்பத்துக்குமேற்ப கொடுக்கின்ற இலக்கியங்கள் மாறுபடுகின்ற போதுதான் ஆரம்பக் கலை இலக்கியம், இன்றைய கால இலக்கியம் என்று இரண் டாகப் பேசப்படுகின்றது.

அன்றைய நிகழ்வுகள் அடுத்த சந்ததியினருக்கு தெரியப்படுத்தும் அங்கமாக இலக்கியம் இருக்கின்றபோதுதான் ஆரம்ப கால இலக்கியம் இன்றும் பேசப்படுகின்றது. நவீனத்துக்கு உட்படுத்தி நிற்கின்ற போது புது இலக்கிய நடை தோற்றம் பெற்று உலவுகின்றபோது இலக்கியம் என்றைக்குமே நிகழ்வுகளாக அமைகின்றது. பன்முகப் பார்வை கொண்டதாக இலக்கியங்கள் பேசப்படுகின்றது. ஆனால் வரையறைக்குள் இலக்கியம் பேசப்படாத விடத்து பல வடிவங்களாக வெளிப்படுகின்றது. அந்த வடிவம் ஒவ்வொன்றும் எமக்கு சமூகம் சார்ந்த சிந்தனையூடாக கருத்துக்களை வெளிப்படுத்துவதன் மூலம் தான் சிறந்த இலக்கியப் படைப்பாக விளங்குகின்றது.

அந்தந்தக் காலப்பகுதியில் ஏற்படுகின்ற சமூக மாற்றத்துக்கு ஏற்ப இலக்கியங்கள் படைக்கப்படவேண்டிய தேவையுள்ளது. இன்றைய காலத்தில் அப்படியான படைப்புக்கள் போர்க்களத்தில் நின்ற போராளிகளால்தான் எழுதப்படுகின்றது.

எமது மண்ணில் நடைபெற்ற போர் பற்றி நாளைய சந்ததியினர் அறிய முற்படும்போது அது கல்வியூடாகக் கொண்டு வரவேண்டிய தேவையுள்ளது. ஆகவே இன்றைய காலத்தில் ஏற்படுகின்ற நிகழ்வுகள் தரமான இலக்கியமாகப் படைக்கவேண்டிய முக்கியமான தேவையுள்ளது. இதனை இலக்கியப் படைப்பாளிகளும், எழுத்தாளர்களும் கருத்திற் கொள்வது நல்லது.

எதிரி எமது மண்ணில் செய்த அட்டூழியங்களை மூடிமறைப்பதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கின்றபோது, நாம் அதனைக் கருத்திற் கொண்டுவராது பழைய புராணம் பாடிக்கொண்டும் இருக்கிறோம். கம்பராமாயணமும் இராவணன் கதையும், அரிச்சந்திரா மயான காண்டத்தையும் படித்துக்கொண்டு இருக்கின்றோம்.

செல்வா

## எமது பலம் அதிகமானதும் எமது களம் அதிகமானதும்!



கூனிக் குறுகி அவமானப்பட்டு
நிற்கையில்
குளிர்போன திசையில் சூடும்
இறங்கி விடும்.
உணர்வுகள் இல்லாத பிணமாக
கிடத்தி வைத்தாலும், நடக்க விட்டாலும்
ஒன்றான செயற்பாடுகளில்
வேறுபடுத்த முடியாததாகி விடுகிறது
போல்
இருண்ட சூழலில்
கூடுதலாக வெருண்ட படைகளின்
மத்தியில் மக்களும்,
யாரை இனங்காட்டுவது!

உந்தச் சந்தியில் ஆமி அடிக்கிறானா
என்று கேட்டுப் போகும்
சனங்களின் மாற்றம்,
குண்டு வெடித்தாலும் அதே வீதியில்
பயணிக்கத் தோன்றுகின்ற முடிவு,
என்ன நடந்தாலும்
எமது அன்றாட செயற்பாடுகளின்
குறுக்கே, எதுவும் தோற்றுவிடுகிற
போது
எத்தனை பேரை அடிக்கமுடியும்
சுட முடியும்!
எமது வாழ்விடங்களும், தெருக்களும்
இராணுவ கால் தடங்களின்
அழுத்தத்தால்
நிறையவே மாறுபட்டு விடுகின்றது!

கடைக்காரர்களிடம் பணம் பறித்தலும்,
வீதியில் செல்வோர்களின்
கான் போன்கள் பறித்தலும்,
இரவில் வீடுகளுக்குள் புகுந்து
களவெடுத்தலும்,
பட்டாசு, ரயர் ரியூப் வெடித்ததும்
பய பீதி அடைவதும்,
தானே தனது காலினை சுடுவதும்
பல ஆயிரம் படைகளின்
கட்டுப்பாட்டில்
அரங்கேறுகிற நிகழ்வுகளில் இருந்து
தெரிகிறது
எமது பலம் அதிகமாகியதும்,
எமது களம் பலமானதும்.

கல்வி கற்கும் பாடசாலைகளின்
முன்னேயும்,
பல்கலைக்கழகத்தை சுற்றியும்
ஆயுதங்களுடன் நிற்கின்ற சூழல்
ஏற்பட்டிருக்கின்றது.

மாணவர் சமூகம்
ஒரு நாட்டின் தலை விதியையே
மாற்றும் என்பார்கள்
இங்கே மாணவர்கள்...?
கூலிக்கு வந்தவனை விட
தியாகத்துக்கு வந்தவன் உறுதியானவன்!

# சுனாமியால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு இயேசு சபைப் பணியினரால் புலமைப்பரிசில்

கிளிநொச்சி—

கிளிநொச்சி மாவட்டத்தில் தர்மபுரம், வடமராட்சி கிழக்கு ஆகிய இடங்களில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு கிளிநொச்சி மாவட்ட யேசுசபை அகதிப் பணியினரால் புலமைப்பரிசில் 492 மாணவர்களுக்கு வழங்கப்படவுள்ளது.

இதன் அடிப்படையில் முதற் கட்டமாக 03.12.2005 அன்று தாளையடி றோமன் கத்தோலிக்க பாடசாலையில் கிளிநொச்சி, இலங்கை வங்கிக் கிளையினரால் புலமைப்பரிசில் தொகை வைப்புச் செய்யப்பட்டது.

இதனைத் தொடர்ந்து 4.30 மணியளவில் யேசுசபை அகதிப் பணியினரின் இலங்கை இயக்குநர் அருட்தந்தை வின்னி யோசப், கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளர் அருட்தந்தை லியோ ஆம்ஸ்ரோங் மற்றும் பணியாளர்கள், வடமராட்சி கிழக்கு அரசியற்துறைப் பொறுப்பாளர், காவற்துறைப் பொறுப்பாளர், தாளையடி பங்குத் தந்தையர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். தேசியக்கொடியை வடமராட்சிகிழக்கு அரசியற்துறைப் பொறுப்பாளர் அன்பழகனும், யேசுசபை அகதிப் பணிக் கொடியை இலங்கை இயக்குநர் வின்னி யோசப் ஏற்றினர்.

பங்குத் தந்தை அன்ரனிதாஸ் இங்கு உரையாற்றும் போது மாணவர்களுக்கான இந்தத் திட்டத்தை தாம் வரவேற்பதாகவும், இதனைத் தகுந்த முறையில் பிரயோசனப் படுத்துமாறும் மாணவர்களைக் கேட்டுக்கொண்டார்.

சபையின் இலங்கை இயக்குநர் வின்னி யோசப் பேசும் போது- சபையின் முக்கியமான முதற் பணி கல்வி என்றும், அதனை மாணவர்கள் மாலை நேரக் கல்வியினூடு பிரயோசனப் படுத்த வேண்டும்என்றும்கூறினார்.

வடமராட்சி கிழக்கு அரசியற்துறைப் பொறுப்பாளர் அன்பழகன் இங்கு உரையாற்றுகையில் - இந்த யேசுசபை பணி வடமராட்சி கிழக்கில் நடைமுறைப்படுத்தப்பட்டதால் தாம் பெருமைப்படுகின்றோம் என்றும், மேலும் வளர்ச்சியடைய வேண்டும் என்றும் கூறினார்.

கிளிநொச்சி, இலங்கை வங்கி முகாமையாளர் இந்தக் கணக்கின் நடைமுறை பற்றி எடுத்துக் கூறினார். அவரது உரையுடன் இந்த நிகழ்வு நிறைவுபெற்றது.

# மாடிக் கட்டடம் அமைத்தும் நிர்வாகத்திடம் ஒப்படைக்கவில்லை!

கிளிநொச்சி—

கிளிநொச்சி வலயத்திற்குட்பட்ட பூநகரிக் கோட்டத்தில் இயங்கி வரும் பூநகரி மகா வித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட இரு மாடிக் கட்டடம் பயன்பாட்டுக்காக இதுவரையில் கையளிக்கப்படவில்லை.

மேற்படி பாடசாலையில் 2003ம் ஆண்டு இருமாடிக் கட்டடத்துக்கான அடிக்கல் நாட்டப்பட்டு கட்டட வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட போதும் ஒப்பந்தகாரரின் அசமந்தப் போக்கால் கட்டடம் முழுமை பெற காலதாமதமாகியது.

காலதாமதத்தின் பின் முழுமையடைந்த இந்தக் கட்டடம் ஒருவருடமாகியும் பாடசாலை சமூகத்தினரிடம் உத்தியோக பூர்வமாகக் கையளிக்கப்படவில்லை. இதனால் இந்தப் பாடசாலை மாணவர்களின் பெற்றோர் விசனம் அடைந்துள்ள அதேவேளை இந்தக் கட்டடம் கையளிக்கப்படாமைக்கு காரணம் என்ன என்றும் கேள்வி எழுப்பியுள்ளனர்.

எனவே, சம்பந்தப்பட்ட தரப்பினர் இவ்விடயத்தில் உரிய கவனம் செலுத்த வேண்டுமென இந்தப் பாடசாலை மாணவர்களின் பெற்றோர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# கிளிநொச்சியில் சமகால அரசியல் கருத்தரங்கு

கிளிநொச்சி—

கிளிநொச்சி மாவட்ட விளையாட்டுக்கழக உறுப்பினர்களுக்கான சமகால அரசியற் கருத்தரங்கு கடந்த வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்தக் கருத்தரங்கில் கிளிநொச்சி விளையாட்டுக் கழகங்களின் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

கிளிநொச்சி மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளரதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் லெப்ரினன்ட் கேணல் ராஜன் கல்விப் பிரிவு பொறுப்பாளர் கீதன் மாஸ்டர் கருத்துரை வழங்கினார்.

இதன்போது கிளிநொச்சி மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சிவநாத் தூயவன், அரசறிவியற் கல்லூரி பொறுப்பாளர் அ.பார்த்தீபன், ஊரகவளர்ச்சி நிறுவனப் பணிப்பாளர் ஆகியோர்கலந்துகொண்டனர்.(09)

# சோதியா படையணியின் கராத்தே சுற்றுப் போட்டி





கிளிநொச்சி—

மேஜர் சோதியாவின் 16 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு மேஜர் சோதியா படையணியினரால் நடத்தப்பட்ட கராத்தே சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

விதுரா தலைமையில் நடைபெற்ற இந்தப் போட்டியில் முதல் நிகழ்வாக மேஜர் சோதியாவின் திருவுருவப்படத்துக்கான ஈகச்சுடரை தமிழீழ கராத்தே சம்மேளனத் தலைவரும் 5 ஆவது கறுப்புப்பட்டி பெற்றவருமான மா.இரட்ணசோதி ஆசிரியர் ஏற்றிவைத்தார்.

திருவுருவப்படத்துக்கான மலர் மாலையை மாலதி படையணி சிறப்புத்தளபதி கேணல் யாழினி அணிவித்தார். அகவணக்கத்துடன் போட்டி நிகழ்வுகள் ஆரம்பமாகின.

தொடர்ந்து வெற்றிபெற்றவர்களுக்கான சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. நிகழ்வில் போராளிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# காணிப் பிணக்குகள் தொடர்பான நடமாடும் சேவைகள் ஆரம்பம்

கிளிநொச்சி—

கரைச்சிப் பிரதேச செயலக காணி அலுவலகத்தினால் - நடமாடும் சேவைகள் மூலம் காணி சம்பந்தமான பிரச்சினைகள் இனங்காணப்பட்டு, அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இன்று திருநகர் வடக்கு, தெற்கு கிராம மக்களுடைய காணி சம்பந்தமான விசாரணைகள் திருநகர் வடக்கு கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்திலும், 17 ஆம் திகதி கனகாம்பிகைக்குளம் கிராம மக்களுடைய காணி சம்பந்தமான விசாரணைகள் கனகாம்பிகைக் குளம் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்திலும்.

எதிர்வரும் 19 ஆம் திகதி இரத்தினபுரம் ஆனந்தநகர் கிராம மக்களுடைய காணி சம்பந்தமான விசாரணைகள் ஆனந்தபுரம் கிராமசேவை அலுவலகத்திலும் காலை 9 மணி முதல் மாலை 4 மணிவரை இடம்பெறவுள்ளன.

இந்த விசாரணைகளுக்கு சமுகமளிப்பவர்கள் தங்களது காணியை உறுதிப்படுத்தக்கூடிய சகல ஆவணங்களுடன் சமுகமளிக்கும்படி கரைச்சிப் பிரதேச செயலக காணி உத்தியோகத்தர் செ.ஸ்ரீரெங்கநாதன் தெரிவித்தார்.

(09)

## அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல்

மட்டக்களப்பு—

சின்னவத்தைக் கிராம அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் அண்மையில் சின்னவத்தைக் கிராம சேவகர் அலுவலகத்தில் நடைபெற்றது.

போரதீவுப் பற்று பிரதேச செயலாளர் கதிர்காமநாதன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் பிரதேச அபிவிருத்திகளை இனம் கண்டு அவற்றை அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியோடு முன்னெடுப்பது தொடர்பாக ஆராயப்பட்டது.

## விஞ்ஞான பாட நூல்கள் வழங்கப்படவில்லை !

அம்பாறை—

அம்பாறை மாவட்டத்திலுள்ள பாடசாலைகளுக்கு புதிய கல்விச் சீர்திருத்தத்துக்கமைய - தரம் 8 மாணவர்களுக்கான விஞ்ஞானப் பாடநூல் இன்னும் கிடைக்கவில்லையென புகார் தெரிவிக்கப் படுகிறது.

2006முதலாம்ஆண்டுதவணைக்கான பாடசாலைகள் ஆரம்பமாகி பல நாட்கள் கடந்த நிலையில் விஞ்ஞான பாடநூல் கிடைக்காததால் பாடங்களுக்குரிய கால அடிப்படையில் கற்பித்தல் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக ஆசிரியர்கள் தெரிவித்தனர்.

அம்பாறை மாவட்ட பாடசாலை மாணவர்கள் தரம் 8 இற்கான விஞ்ஞான பாடநூல் எப்போது வழங்கப்படுமெனக் காத்திருப்பதோடு பாடத்தின் உள்ளடக்கங்கள் அவை தொடர்பான விடயங்களையும் அறிய முடியாத துர்ப்பாக்கிய நிலை காணப்படுகின்றது.

# பொங்கல் பொருட்களை வாங்கச் சென்றோர் கைது

திருகோணமலை —

திருகோணமலை மாவட்டத்தில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலிருந்து இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கு தைப்பொங்கலுக்காக பொருட்கள் கொள்வனவு செய்யச் சென்ற மூன்று பொதுமக்களை திருகோணமலையில் இராணுவத்தினர் கைதுசெய்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது திருகோணமலையில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலிருந்து இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குச் சென்ற கடற்கரைக்குச் சேனையைச் சேர்ந்த அரசரெத்தினம் குணராஜா(வயது 31), அதே இடத்தைச் சேர்ந்த சந்திரசேகரம் ஈஸ்வரன் (வயது 34) மற்றும் களைமுந்தலைச் சேர்ந்த கதிர்காமத்தம்பி ஆனந்தன் (வயது 27) ஆகிய மூவருமே படையினரால் கைது செய்யப் பட்டவர்களாவர்.

# விழிப்புணர்வு கருத்தூட்டல் நிகழ்வு

வட்டக்கச்சி —

வீதி விபத்துத் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தூட்டல் நிகழ்வொன்று அண்மையில் தமிழீழ சுகாதார சேவையினரால் வட்டக்கச்சியில் நடத்தப்பட்டது.

கல்மடுவிலுள்ள அரிசி ஆலைப் பணியாளர்களுக்கும், வட்டக்கச்சியிலுள்ள சேரன் தொழிலக பணியாளர்களுக்கும் 'வீதி விபத்திலிருந்து எம்மைப் பாதுகாப்போம்' என்னும் தலைப்பிலான கருத்தூட்டலும், தொழிற்சாலைகளில் ஏற்படும் விபத்துக்கள் தொடர்பான கருத்துரைகளும் வழங்கப்பட்டன.

இந்தக் கருத்தூட்டல் நிகழ்வில் 200 இற்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டு பயன் பெற்றனர். (09)



தமிழர் திருநாளான பொங்கல் தினத்தன்று கிளிநொச்சி நகரில் நடத்தப்பட்ட பண்பாட்டு ஊர்வலத்தில் பாரம்பரிய கலைகளை குறிக்கும் வகையில் கலைஞர்கள் அணிவகுத்துச் செல்லும் காட்சிகளை படங்களில் காணலாம்

# மின் விநியோகம் சீரில்லை; புதுக்குயிருப்பு மக்கள் விசனம்!

புதுக்குடியிருப்பு—

இலங்கை மின்சார சபையினரால் புதுக்குடியிருப்புக்கு மின்சாரம் விநியோகிக்கப் பட்டிருக்கின்ற போதிலும், இது சீரற்றிருப்பதாக தெரியவருகிறது.

மின்விநியோகம் ஒருமின் பிறப்பாக்கி மூலமே இடம் பெறுவதால், அந்த மின் பிறப்பாக்கி பழுதடைந்தால், மின் விநியோகம் தடைப்படும் நிலை காணப்படுகிறது. தொடர்ந்து மின்சாரம் வழங்குவதற்கு வேறு மின்பிறப்பாக்கி இல்லை. இதனாலேயே இந்த அவலநிலை ஏற்பட்டுள்ளது.

எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கூடிய கவனம் எடுத்து புதிதாக ஒரு மின்பிறப்பாக்கியை புதுக்குடியிருப்புக்கு கொண்டு வருவதன் மூலம் இவ்வாறான மின்தடங்கலை நீக்க முடியும் எனமக்கள் எதிர்பார்க்கின்றனர்.

ஈழநாடு

வைர வரிகள்

பிறன்பழி கூறுவான் தன்வழி உள்ளும்
திறன்தெரிந்து கூறப் படும்.

- திருக்குறள்

நமது நோக்கு

# அப்பட்டமான மீறல்

மட்டக்களப்பு நகரில் - இராணுவ உயர்பாதுகாப்பு வலயத்தில் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு அலுவலகத்துக்குள் குண்டுத் தாக்குதல் ஒன்று நடத்தப்பட்ட விடயம் பாரதூரமானதாகும்.

நான்கு வருடங்களுக்கு முன்னர் போர்நிறுத்த உடன்பாடு ஏற்பட்டபோது - அதைக் கண்காணிக்க ஆயுதங்கள் எதுவுமில்லாமல் 60 நோர்டிக் நாடுகளின் பிரதிநிதிகள் முன்வந்தனர்.

கண்காணிப்புக்குழுவினர் மீதான இந்தத் தாக்குதல் குறித்து புலிகள் தரப்பில் அதிர்ச்சியும், கண்டனமும் வெளியிடப்பட்டிருக்கிறது. ஆனால், அரசாங்கத் தரப்பிலிருந்து இதுவரை எந்தக் கண்டனமும் வெளிவரவில்லை.

இந்தத் தாக்குதலை நடத்தியவர்கள் யார் என்பதை - வழக்கம் போலவே பொலிஸார் கண்டுபிடிக்கப் போவதில்லை. இனந்தெரியாத நபர்கள் என்ற பெயரில் அரசின் துணை ஆயுதக்குழுக்களால் எத்தனையோ தாக்குதல்கள், படுகொலைகள் நடத்தப்படுகின்றன.

இவையெல்லாம் பொலிஸாரைப் பொறுத்தவரையில் கண்டுபிடிக்கப்படவேண்டிய - துப்புத்துலக்கப்படவேண்டிய விடயங்களல்ல என்பது போன்ற நிலை உருவாகியுள்ளது.

இப்படிப்பட்ட நிலையில், கண்காணிப்புக்குழுவின் அலுவலகம் மீதான தாக்குதல் குறித்து ஆராய்ந்து - குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்படுவார்கள் என நம்புவது வெறும் மடமைத்தனம்.

இதேவேளை - இத்தகைய தாக்குதல்களுக்கு எதிராக அரசாங்கம் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்காமல், ஊக்குவித்து வளர்த்ததுடன், சர்வதேச சமூகமும் அக்கறை காட்டாமல் இருந்துவிட்டது.

கிழக்கில் துணை ஆயுதக்குழுக்கள் இயங்குவதை அரசாங்கம் மறுத்தாலும் - அப்படி ஒன்று இருக்கிறது என்றும், இந்த ஆயுதக்குழுக்களால்தான் அமைதியின்மை தோன்றியிருப்பதாகவும் கண்காணிப்புக்குழு கடந்த வெள்ளியன்று காட்டமான கண்டனம் தெரிவித்திருந்தது.

அன்று இரவுதான் மட்டக்களப்பு கண்காணிப்புக்குழு அலுவலகத்துக்குள் குண்டுவெடிப்பு நிகழ்ந்திருக்கிறது. சுற்றிலும் இராணுவத்தினர் காவல் நிற்க - கண்காணிப்புக் குழு வாகனத்தரிப்பிடத்துக்குள் நுழைந்து குண்டு வைத்து விட்டுச் செல்வது சுலபமான காரியமா?

இதனால்தான், அரச படைகளின் பாதுகாப்புடனும், ஆசீர்வாதத்துடனும் இயங்கும் துணை ஆயுதக்குழுக்கள் மீது சந்தேகம் எழுகிறது. துணை ஆயுதக்குழுக்களிடம் இருந்து ஆயுதங்களைக் களைந்துவிட்டதாக அரசாங்கம் கூறினாலும், இதுவரை அப்படி எதுவுமே நடக்கவில்லை.

துணை ஆயுதக்குழுக்களைக் கொண்டு தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தைச் சிதைக்க அரசு முனைகிறது. இதனால் அரசுக்கு அவர்கள் தேவைப்படுகிறார்கள். ஆயுதக் குழுக்களிடம் இருந்து ஆயுதங்களைக் களையுமாறு புலிகளும், கண்காணிப்புக்குழுவும் தொடர்ச்சியாகக் கோரிவருவதால், சினமடைந்து இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம்.

போர்நிறுத்தம் அமுலில் இருக்கிறதா எனக் காட்டமாகக் கேள்வியெழுப்பிய கண்காணிப்புக்குழுவுக்கு, ஆயுதக்குழுவினரால் விடுக்கப்பட்ட எச்சரிக்கையாகவே இதனைக் கருதவேண்டும்.

இது நாட்டின் நிலைமை மோசமான கட்டத்துக்குள் சென்றுகொண்டிருப்பதைத்தான் காட்டி நிற்கிறது. புலிகளுக்கும் அரசுக்கும் இடையிலான போர்நிறுத்தத்தைக் கண்காணிக்கும் அமைப்பொன்றை விரும்பாத இந்தத் துணை ஆயுதக்குழுக்களின் வேலையே இது.

கண்காணிப்புக்குழுவினருக்கே குண்டுவைக்கும் அளவுக்குச் சென்றுவிட்ட பின்னரும் - தமக்கு இதுபற்றி எதுவுமே தெரியாதென படைத்தரப்பு கையை விரிப்பதில் எந்த விதமான அர்த்தமுமில்லை.


அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இதுவரை நடந்த - புலிகள் மீதான - தமிழ்த் தேசிய உணர்வாளர்கள் மீதான தாக்குதல்களுக்கு தாம் பொறுப்பல்ல என்று கூறித் தப்பிக் கொண்டதுபோல - கண்காணிப்புக்குழு மீதான தாக்குதலையும் ஒதுக்கிவிட முடியாது.

அரச படைகளின் உயர் பாதுகாப்பிலுள்ள பகுதியில் - அவர்களின் தீவிர கண்காணிப்புக்குட்பட்ட பகுதியில் நடந்த தாக்குதலுக்கு அரசும், அதன் படைகளுமே பொறுப்பு.

கண்காணிப்புக்குழு மீது தாக்குதல் நடத்துமளவுக்குச் சென்றிருக்கும் நடவடிக்கைகள் - சமாதான முயற்சிகளைப் பாதிக்குமளவுக்குச் செல்லாது என்பதற்கு எந்த உத்தரவாதமுமில்லை.

267, Navalar Road,
Jaffna.
T.P. - 021-2225107
www.eezhanaadu.com

நாடும் நடப்பும்




# குடாநாட்டில் வன்முறைகளை கட்டுப்படுத்த உடனடியாக நடவடிக்கை எடுங்கள்!

## கண்காணிப்புக்குழுவுக்கு கஜேந்திரன் எம்.பி. கடிதம்

யாழ்ப்பாணம் —



யாழ்குடாநாட்டு மக்கள் மீது இராணுவத்தினரும், ஈ.பி.டி.பி. தேசவிரோதக் கும்பல்களும் இணைந்து நடத்திவரும் அடாவடித்தனங்களை உடன் நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு யாழ். மாவட்ட போர்நிறுத்தக் கண்காண்ணிப்புக் குழுவினரிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

குடாநாட்டு மக்கள் மீது இராணுவத்தினரும், இவர்களுடன் இணைந்து செயற்படும் தேசவிரோதக்குழுவான ஈ.பி.டி.பியினரும் நடத்திவரும் வன்முறைகளை விளக்கி அனுப்பி வைத்த கடிதத்திலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

கடந்த வாரம் புத்தூரில் சொக்கதிடல் கிராமத்துக்குச் சென்ற படையினர், தம்பு நடேசன் என்பவரைக் கடத்திச் சென்று வெட்டியும், கொத்தியும் சித்திரவதை செய்துவிட்டு சிறுப்பிட்டிப்பகுதியில் உடலைப்போட்டுவிட்டுச்சென்றனர்.

அதன்பின்னர் தினமும் இரவு 10.30 மணிக்குப் பின்னர் அந்தக் கிராமத்துக்குச் செல்லும் படையினர் இரவு வேளைகளில் தகாதவார்த்தைகளால் பெண்களையும், ஆண்களையும் திட்டித் தீர்ப்பதுடன் அவர்களை குறிப்பிட்ட சாதியின் பெயரைச் சொல்லி கீழ்த்தரமாகப் பேசுவதுடன், சில இளைஞர்களின் பெயர்களைக் கூறி அவர்களை விரைவில் கொலை செய்யப்போவதாகவும், பெண்கள் மீது பாலியல் துஸ்பிரயோகங்களை மேற்கொள்ளப் போவதாகவும் மிரட்டி வருகின்றனர்.

நேற்றுமுன்தினம் தைப்பொங்கல் தினத்திலும் இரவு வீடு வீடாகச்சென்று மிரட்டியுள்ளனர்.

இதனால் மரணபயத்தில் மக்கள் வீடுகளில் இரவில் தங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. படையினரது இந்தக் கெடுபிடிகளைத் தடுத்துநிறுத்த உடன் நடவடிக்கை எடுக்கும்படி வேண்டுகின்றேன்.


அத்துடன் நேற்று மாலை ஞாயிற்றுக் கிழமை ஊர்காவற்துறையில் வைத்து இளைஞர் ஒருவர் ஈ.பி.டி.பியினரால் வெட்டிக்கொல்லப்பட்டதாக பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.


இந்தச் சம்பவத்தை நேரில் கண்ட சாட்சி ஒருவரை கடற்படையினரும், பொலிஸாரும், ஈ.பி.டி.பியினரும் இணைந்து பிடித்துச்சென்றதாக பொதுமக்கள் தகவல் தெரிவித்துள்ளனர். இது தொடர்பான குற்றவாளிகளைக் கைதுசெய்ய நடவடிக்கை எடுக்கும்படி வேண்டுகின்றேன்.

குடாநாட்டில் பரவலாக படையினர் சோதனைக் கெடுபிடிகளில் ஈடுபடுவதுடன் தமது வாகனப் போக்குவரத்துக்காக பொதுமக்களின் போக்குவரத்தை பல மணிநேரம் தடுத்துவைக்கின்றனர்.

நேற்றும் பலாலி வீதியில் ஒருமணிநேரம் பொதுமக்களின் போக்குவரத்தினை தடைசெய்து வைத்திருந்தனர். அத்துடன் சோதனைக் கெடுபிடிகளில் ஈடுபடும் படையினர் அடையாள அட்டைகளைப் பறித்துச்செல்கின்றனர். இந்த நிலைமைகளைத் தடுத்துநிறுத்தி இயல்புநிலையை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகின்றேன் எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வைகோவின் 'சிறையில் விரிந்த மடல்கள்' நேற்றுமுன்தினம் கனடாவில் வெளியீடு!





றொறன்ரோ —

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச்செயலாளர் வைகோ எழுதிய 'சிறையில் விரிந்த மடல்கள்' நூல் நேற்றுமுன்தினம் கனடாவின் றொறன்ரோ நகரில் நடைபெற்ற தமிழ் புத்தாண்டு பொங்கல் திருநாள் நிகழ்வின்போது வெளியிட்டு வைக்கப்பட்டது.

தமிழ்ப் படைப்பாளிகள் கழகத்தினரால் கனடா முருகன் கோவில் விழா அரங்கில் தமிழ் புத்தாண்டு விழா, (திருவள்ளுவர் ஆண்டு 2037) மற்றும் பொங்கல் திருநாள் நிகழ்வு வெகுசிறப்பாக நடத்தப்பட்டது. இதன்போதே வைகோ எழுதிய சிறையில் விரிந்த மடல்கள் நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது. சிறையில் விரிந்த மடல்கள் நூலின் முதற்பிரதியை பிரபல வீடு விற்பனை முகவரும், தமிழ் உணர்வாளருமான உதயன் பொன்னுத்துரை பெற்றுக்கொண்டார்.

இந்த நிகழ்வில் - தமிழர் தேசிய இயக்கத்தின் சார்பில் பழ. நெடுமாறனை ஆசிரியராகக் கொண்டு தமிழகத்திலிருந்து வெளிவரும் தென் செய்தி இதழின் கனேடியப் பதிப்பும் வெளியிட்டு வைக்கப்பட்டது. தென் செய்தி இதழின் முதற்பிரதியை மாவீரர் 2 ஆம் லெப்.மேகலாவின் தாயார் திருமதி பாலசுப்பிரமணியம் வெளியிட்டுவைக்க, தமிழ் உணர்வாளரும், பிரபல வணிகருமான பாபு பெற்றுக்கொண்டார். புரவலர் சிலரின் உதவியோடு தென்செய்தி இதழ் கனேடியத் தமிழர்களை இலவசமாகச் சென்றடையவுள்ளது.

நடனம், ஏடுதொடக்குதல், தூய தமிழ்ப்பெயர் தெரிவு, தமிழ் மொழியறிவுப் போட்டிகளில் வெற்றிபெற்றோருக்கான பரிசளிப்பு எனப் பல நிகழ்ச்சிகள் இந்த நிகழ்வின்போது இடம்பெற்றன. ஆண்டு தோறும் தூய தமிழ்ப்பெயர்கள் இரண்டு - குடவோலை மூலம் தெரிவுசெய்யப்பட்டு ஒவ்வொருவருக்கும் 500 டொலர் தமிழ்ப் படைப்பாளிகள் கழகத்தினரால் பரிசாக அளிக்கப்படுவது இங்கு குறிப்பிடத்தக்கது.

தமிழ் மொழியறிவுப்போட்டியில் முதலிடம் பெற்ற குழந்தைகளுக்கு தங்கப்பதக்கமும், மற்றைய இடங்களைப்பெற்ற குழந்தைகளுக்கு, வெள்ளி, வெண்கலம் மற்றும் ஊக்குவிப்புப் பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

# வெள்ளிவிழா நாயகன் அருட்பணி ஸ்ரீபன் அடிகளார்



கடல் அலை தாலாட்டும் சின்னஞ்சிறு கிராமம்தான் நாவாந்துறை. யாழ். நகருக்கு மேற்காய் அமைந்த கிராமம். தாழ்ந்த இல்லங்கள் - ஆனால், உயர்ந்த உள்ளங்கள் நிறைந்து வாழும் கிராமம். சிறந்த மனங்களும், உயரிய குணங்களும் கொண்டது. அவர்களது வாழ்க்கை கடலை நோக்கியதே. கடற்தொழிலிலும் மடை திறந்த நெஞ்சங்கள் வாழும் இடம். இறை பக்திக்கும், மறை உத்திக்கும் குறையின்றி இரு ஆலயங்கள் இவர்களது ஆழமான விசுவாச வாழ்க்கைக்கு எடுத்துக்காட்டு.

இத்தகைய புகழ் மணக்கும் கிராமத்தில் அடக்கம், அன்பு அமைதி, ஆழமான பக்தி, சேவை மனப்பான்மை கொண்ட உயரிய குடும்பத்திலே திரு. திருமதி அந்தோனிப்பிள்ளை தம்பதிகளின் செல்வப் புதல்வன் தான் வெள்ளிவிழாக் காணும் நாயகன். பெற்றோர் பெருமையுடன் மரியன்னை புகழ் மணக்கும் மரியதாஸ் எனப் பெயரிட்டனர். பெயருக்கேற்ற மரியன்னை பக்தனாய், வித்தகனாய் விளங்கினார் மரியதாஸ். இவரின் தந்தையார் நடந்தால் நிலத்தில் சுவடு பதியாது. அன்னையார் வாய் திறந்தால் கிட்ட நின்றால் தான் கேட்கும், விளங்கும். அத்தகைய அமைதியான, அன்பான, பண்பான அன்னை. இவர்களுடன் நான் பழகிய போது இவர்களைப் பற்றி நிறைய அறியும், அனுபவிக்கும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது.

ஆரம்பக் கல்வியை தனது சொந்தக் கிராமத்திலும், உயர் கல்வியை புனித பத்திரிசிரியார் கல்லூரியிலும் பெற்றபோது, தனது ஆன்மீக விழுமியங்களையும், நற்பண்புகளையும், கல்வியில் கரிசனையையும், விளையாட்டில் வீரத்தையும், திறமைகளையும் வெளிக்காட்டத் தவறவில்லை. கட்டுமஸ்தான இளைஞன். ஒழுக்க சீலன், பல்துறை வித்தகனாகத் தன்னை வெளிக்காட்டினார். அதிலும் பத்திரிசியார் கல்லூரியின் உதைபந்தாட்ட அணியிலே தனியான இடம்பெற்று, கல்லூரியின் புகழுக்கும், பெருமைக்கும், வெற்றிக்கும் உரியவரானார். விளையாட்டு மைதானத்தில், விளையாட்டுப் பண்புகளுக்கு அமைய விளையாடி எல்லோர் நெஞ்சிலும் இடம்பெற்றார்.

இத்தகைய பண்புகளை கல்வித்துறையிலும், விளையாட்டுத்துறையிலும் வெளிக்காட்டிய போதும், ஆன்மீக விழுமியங்களை மறைவாகப் பாதுகாத்து, அதன்படி ஒழுகி வந்தார்.

அன்னையின் அன்பு மொழி, தந்தையின் மறைத் தாலாட்டு, மரியன்னையின் காவல், பராமரிப்பு இவரைப் படிப்படியாக இறை அழைப்பின் குரலுக்கு செவி மடுக்க வைத்தது. பக்திப் பரம்பரையில் விதைக்கப்பட்ட விதையல்லவா? இவரின் சின்ன இதயத்தில் அழைப்பின் குரல் ஒலிக்கத் தொடங்கியது.

தந்தையாரின் தொழிலும், குருக்கள், கன்னியர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்ட தொழிலாகும். தந்தையாரின் அரவணைப்பும், அன்னையின் வழிநடத்தலும் இறை அழைத்தலை இதய சுத்தியுடன், இனிய மனத்துடன் ஏற்கவைத்தது. இதற்கமைய அவர் இறையடி சேர்ந்த தவத்துறவி தோமஸ் அடிகளாரால் ஆரம்பிக்கப்பட்ட, அதிகம் அந்நாட்களில் அறியப்படாத தோலகட்டிக் கிராமத்தில் அமைந்த செபமாலைத்தாசர் சபையோடு தன்னை இணைத்துக் கொண்டார். மரியன்னை இவரை அணைத்துக் கொண்டார்.

இந்தச் சபையிலே இவர் தன்னை இணைத்துக் கொண்ட போதுதான் இவருக்கு வழங்கப்பட்ட பெயர் ஸ்ரீபன். இந்தப் பெயர் மாற்றங்கள் துறவற சபைகளில் நிகழ்வது வழக்கம். இதனால் இவரது புதிய நாமம் 'ஸ்ரீபன்' நிலைத்து வாழத் தொடங்கியது. இன்று எல்லோர் வாயிலும் ஸ்ரீபன் அடிகளாரின் இந்தப்பெயர் இடம்பெறத் தொடங்கியது.

ஆரம்ப துறவுப் பயிற்சியை இலங்கையில் நிறைவு செய்து கொண்டு உயர் பயிற்சியைப் பெறுவதற்கு இந்தியா சென்றார். இங்கு இத்துறவற சபைகளின் கிளைகள் பலவுண்டு. இந்தியாவில் இச்சபை பற்றிய முழுமையான, ஆழமான அறிவையும், அனுபவத்தையும் பெற்றுக் கொண்ட இவர், துறவு வாழ்வின் அர்த்தத்தையும் நிறைவுடன் குறைவின்றிப் பெற்று 1975 மாசி மாதம் 2 ஆம் திகதி இறைவனுக்குத் தனது மூன்று வார்த்தைப் பாடுகள் மூலம் தன்னை முற்றிலும் அர்ப்பணித்தார்.

துறவு வாழ்க்கையில் தன்னை முழுமையாக நுழைத்த அருட்சகோதரர் ஸ்ரீபன் அடிகளார் குருத்துவப் பயிற்சியையும் தொடர்ந்தார்.

மெய்யியல் கல்வியை பெங்களூர் தர்மாரம் கல்லூரியிலும்; இறையியலை பெங்களூர் கார்மேலாரம் கல்லூரியிலும் கற்றுத் தேர்ந்தார். குருத்துவப் பயிற்சியை நிறைவு செய்து, பெங்களூர் புனித இராயப்பர் கல்லூரியிலே திருத்தொண்டர் பட்டம் பெற்றுத் தனது சொந்த நாடாம் இலங்கை திரும்பினார்.

இவர் இலங்கை திரும்பிய போது, யாழ். அருள் ஆச்சிரமத்திலே அதிபராக இருந்த இறையடி சேர்ந்த அருட்பணி பத்திநாதர் அடிகளாரின் பராமரிப்பு வழிநடத்தலின் கீழ் பணியாற்றினார். இது இவருக்குக் கிடைத்த பெரும் பாக்கியம் என்றே நான் துணிந்து கூறுவேன்.

அருட்பணி பாக்கியநாதரின் நேரடி வழிகாட்டலினால் அன்றைய யாழ். ஆயர் மேதகு தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்களினால் 1980 ஆம் ஆண்டு வைகாசித் திங்கள் முதலாம் நாள் இறைவனின் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். மரியதாஸ் என்ற இயற்பெயரைக் கொண்ட ஸ்ரீபன் அடிகளாருக்கு அன்னையின் வணக்க மாதம் முதலாம் திகதியில் திருநிலைப்படுத்தப்பட்டது இறை சித்தத்தின் பெரும் செயலாகும். பணி வாழ்வாகி விட்ட தனது வாழ்வை மரியன்னையின் துணையுடன் இறைவனிடமே அர்ப்பணித்தார்.

முதற் பணியாக தோலகட்டி செபமாலை மாதா ஆச்சிரமத்தின் அதிபராகப் பணியேற்றார். இவரது நிர்வாகத்திறமை, ஆன்மிக வழிகாட்டல்களின் தரம், கடமையின் பொறுப்பு, கண்ணியமான செயற்பாடுகள், சிரித்த முகத்துடன், விரித்த வேத விளக்கங்கள் யாவும் இவரது மேன்நிலைக்கு எடுத்துக் காட்டாகியது. இதனால் இவர் 1986 இல் செபமாலைத்தாசர்களின் மாகாண அதிபராக நியமிக்கப்பட்டார். முன்னைய பொறுப்பை விட, பின்னைய பொறுப்பு மிகக் கடினமாகும். இருந்தும் புன்முறுவல் முகத்துடன் இன்சொற்களால், வன்சொற்கள், செயல்கள் எதுவுமின்றி - நற்செயல்கள் மூலம் இந்தப் பதவியை மேற்கொண்டார். இதற்கு தூய ஆவியின் வழிநடத்தல், அருட் கொடைகள், கனிகள் துணை நின்றன என்றே கூறவேண்டும்.

இதன்பின்னர் 1988 இல் யாழ். அருள் ஆச்சிரமத்தின் அதிபரானார். இங்குதான் இவரது பணியின் மேன்மையை, சிறப்பை யாழ். மக்கள் உணரக் கூடியதாக இருந்தது. அருள் ஆச்சிரமத்தின் வழிபாடுகள், மறை உரைகள் மக்கள் மனதில் இவரது புலமையின் ஆழத்தை, அனுபவத்தை உணரக்கூடியதாக இருந்தது. அனேக அன்பு நெஞ்சங்களைத் தனதாக்கிக் கொண்டார் என்றே கூறலாம்.

இவரது அடக்கமான பணிகளை, கருத்தாளம் மிக்க செயல்களை அறிந்த இந்திய நாடு இவரது பணிக்காக இவரை அழைத்தது. இதன்படி 1990 ஆம் ஆண்டு பங்குனி 25 இல், அதாவது மரியன்னையின் கிறிஸ்து பிறப்பு அறிவிப்பு விழாவன்று இந்தியாவின், திருச்சி மறைமாவட்ட புஸ்பவன ஆச்சிரமத்தின் அதிபராகவும், நவத்துறவு ஆசிரியராகவும் கடமையாற்றச் சென்றார். அங்குள்ள துறவிகளுக்குத் தன் இன்சொல்லாலும், நன்வழி காட்டலாலும் அவர்களுக்கு அரிய, உரிய பயிற்சி நல்கினார். இவை போதாது என்று மேலும் பலபணிகள், பொறுப்புகள் சுமத்தப்பட்டன. சபையினது உயர் தலைவரின் ஆலோசகராகவும், துறவறப் பயிற்சிப் பொறுப்பாளராகவும், இறையழைத்தல் ஊக்குநராகவும் செயற்பட்டார். இந்திய மண்ணில் தன்னாலான கடமைகளை வெற்றிகரமாக முடித்துக்கொண்டு, மீண்டும் யாழ். அருள் ஆச்சிரமத்தின் அதிபராக 1994 ஆம் ஆண்டு ஆடித்திங்கள் 5 ஆம் நாள் பொறுப்பேற்றார்.

அருள் ஆச்சிரமப் பொறுப்பினை மீளப் பொறுப்பெடுத்த காலம், யாழ்.நகரிலே பெரும் போர்க்காலமாக விளங்கியது. இக்காலத்தில் யாழ்.மக்களை ஆறுதல் படுத்துவது, அமைதிப் படுத்துவது, ஆற்றுப்படுத்துவது என்பன பெரும் கஷ்டமாக இருந்தாலும் இவை அனைத்தையும் தனது ஆன்மீக விழுமியங்களால், வழிபாட்டினால் ஆற்றுப்படுத்தினார். ''அஞ்சாதே அஞ்சாதே நான் என்றும் உன்னோடு'' என்ற இறைவாக்கினுக்கு அமைய வழி நடத்தினார். இருந்தும் போர்க்காலம் உச்சக்கட்டத்தை அடைந்தபோதும், மாபெரும் இடப்பெயர்வு இடம்பெற்ற போதும் "மலையே விழுந்தாலும், தலையே சும'' என்ற முதுமொழிக்கிணங்க இறைசித்தத்துடன் செயற்பட்டார்.

இதன் முடிவு, அருட்பணி ஸ்ரீபன் அடிகளாரும், உடன் துறவு சகோதரர்கள், மாணவர்களும் வன்னி மண்ணில் காலடி வைத்தார்கள். இங்கும் இறை சித்தம் செயற்பட்டது. மன்னார் ஆயர் மேதகு இராயப்பு யோசேப்பு அடிகளார் தற்காலிகமாக தங்குவதற்கு இடம் ஒதுக்கிக் கொடுத்தார். ஆனால், இவரது அயராத உழைப்பினாலும், சலியாத மன ஓர்மத்தினாலும் பல சவால்களுக்கு முகம் கொடுத்து, இங்கேயே ''செபமாலை ஆச்சிரமம்'' என்னும் துறவிகள் இல்லமொன்றை 1999 ஆம் ஆண்டு சித்திரைத் திங்கள் 17 ஆம் நாள் அமைத்தார். இந்த இல்லம் வவுனியா மதவுவைத்த குளத்தில் அமைந்தது. சிறிது காலம் இதன் அதிபராகவும் விளங்கினார்.

இன்று மீண்டும் இலங்கை மாகாண அதிபராக, நீர்கொழும்பு கொச்சிக்கடையில், ஓய்வு பெற்ற பேராயர் மேதகு நீக்கலஸ் மார்க்கஸ் பெனாண்டோ அடிகளாரால் உவந்தளிக்கப்பட்ட தூய ஆவியானவரின் ஆலயத்திலே 'றெஜீனா சேவாலயா' ஆச்சிரமம் அமைத்து, அதன் அதிபராகவும், இலங்கை மாகாண அதிபராகவும் பெரும் பணியாற்றுகின்றார்.


இன்னும் தோலகட்டி செபமாலை மாதா துறவற சபையின் நிறுவனர் அருட்பணி தோமஸ் அடிகளாரில் நிறைந்த பக்தியும் பற்றும் கொண்டு விளங்குகிறார். அவரது அருளாளர் உயர்வுக்காக நிறைவாக உழைக்கின்றார். அவர் புனிதர் வரிசையில் உயர்த்தப்பட வேண்டும் என்ற பணியிலும் தன்னை முழுமையாக ஈடுபடுத்தியுள்ளார்.

இதன் உச்சக்கட்டமாக, நீதிமன்ற இராணுவ உத்தரவுகள் பெற்று, நிறுவுநர் தோமஸ் அடிகளாரின் உடலத்தைத் தோண்டி எடுத்து, யாழ். அருள் ஆச்சிரமத்திலே, லூர்துருகபிக்கு அருகாமையிலே மீளடக்கம் செய்து, அனைவரது செப வேண்டுதலுக்கும் வழிகாட்டியாய் அமைந்துள்ளார். அன்னாரது பணி சிறக்க இந்நாளிலே இறையருளை, துணை அருளை வேண்டுவோம்.

''வெள்ளி விழா நாயகனே,
வித்தகனே குருமணியே
துள்ளிவரும் மானொத்த
சேவையின் செம்மலே
பொங்கிவரும் பெருநிலவே,
இறைசேவையிலே
ஓங்கி உயர்ந்திடுவீர், நீடூழி
வாழ்ந்திடுவீர்''

**- மோ.தார்சீசியஸ்**

## நூல் அறிமுகம்




**நூல் அறிமுகம் –**

**நூலின் தலைப்பு – 'சீர் சமைத்த சிற்பி'**

**பொருள் – யாழ்ப்பாணக் கத்தோலிக்க மறை மாவட்டத் திருச்சபையில் ஆயர் ஜேக்கப் ஜெரோம் எமிலியானுஸ் பிள்ளை அ.ம.தி.யின் (1901–1972) வாழ்வும் பணியும்.**

**ஆசிரியர் – அருட்பணி குருஸ் யேசுதாஸ் அன்ரனிபாலா Dip in Theo (Columbuthurai), B.A Hons (Jaffna)B.ph (Rome)M.phil. (Jaffna).**

**வெளியீடு –யாழ்.கத்தோலிக்க இலக்கியக் கழகம், ஆயர் இல்லம், யாழ்ப்பாணம் 19 -12 -2005.**

யாழ்ப்பாணம் அகவொளி குடும்ப வளத்துணை கேட்போர் கூடத்தில் வெளியிட்டு வைக்கப்பட்ட இந்த நூல் - மேற்படி ஆசிரியரால் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் முதுமெய்யியல் மாணிப் பட்டத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரையாகும். 07 -10-2005 இல் ஆசிரியர் மேற்படி பட்டத்தைப் பெற்றுக் கொண்டார். பிரித்தானிய ஆட்சியில் இருந்து இலங்கை, விடுபட்ட வேளையில் தற்போதுள்ள - யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, மதவாச்சி, அனுராதபுரம் ஆகிய அரச மாவட்டங்களை உள்ளடக்கியதோர் பரந்து விரிந்த தமிழ் கத்தோலிக்க மறைமாவட்டமாக இருந்த நிலப்பரப்பில் வாழ்ந்த கத்தோலிக்க மக்களின் முதல் சுதேச ஆயராகத் திகழ்ந்தவரே ஜே.ஜே. எமிலியானுஸ் பிள்ளை ஆவார். இவரது ஆளுகைக் காலம் 1950 முதல் 1972 வரையாகும்.

தென்னிலங்கையில் 20 - 07 -1901 இல் பிறந்து வளர்ந்து, பிரித்தானிய கல்வி மற்றும் வர்த்தக மேலாண்மையில் உருவாக்கம் பெற்ற இவர், வடமறை மாநிலத்தைப் பொறுப்பேற்று, தனது பணிவாழ்வில் வந்த சவால்களை எவ்விதம் துணிவோடு எதிர்கொண்டு, சுதேசமயமாகிக் கொண்டிருந்த ஓர் தலத்திருச்சபையின் தேவைகளுக்கு முகம் கொடுத்தார் என்று இந்த நூல் எடுத்துக் கூறுகிறது.

காலக்கிரமமாக அல்ல, மாறாகப் பணியின் அடிப்படையில் ஆறு இயல்களாக இந்தநூல் பிரிக்கப்பட்டுள்ளது. திருத்தமும், முன்னேற்றமும் என்னும் முதல் பகுதி முதல், மூன்று இயல்களையும் திருப்பமும், உருவாக்கமும் என்றும் - இரண்டாவது பகுதி அடுத்த மூன்று இயல்களையும் கொண்டுள்ளன.

முதலாவது இயல் ஆயரின் பிறப்பு, வளர்ப்பு, உருவாக்கம், ஆளுமை பற்றியும் - இரண்டாவது இயல் சுதேச மயமாகிக் கொண்டிருந்த அன்றைய காலகட்டத்தில் சீரமைக்கப்பட வேண்டியிருந்த திருச்சபையின் பல்வேறு அம் சங்கள் பற்றியும் - மூன்றாவது இயல் இவர் மேற்கொண்ட முன்னேற்றங்களையும், அதில் இவர் அடைந்த பின்னடைவுகளையும் பற்றிக் கூறுகின்றன.

சுதந்திரமடைந்த இலங்கையில் பௌத்த ஆணைக்குழுவின் அறிக்கையின் காரணமாக, சிறிமாவோ அரசு மேற்கொண்ட பாடசாலைகள், தேசிய மயமாக்கல் திருச்சபை அனுபவித்த வேதனைகள் மற்றும் இன்று தமது மாணவர்களின் நல்லொழுக்கம் குன்றிய நிலையால் பெற்றோர் எதிர்நோக்கும் சவால்களை அன்று ஆயர் தூரநோக்குடன் எதிர்பார்த்திருந்ததை நான்காவது இயல் கூறுகிறது. இரண்டாம் வத்திக்கான் சங்கப் பரிந்துரைகளை இவர் முன்னெடுத்தமை குறித்து, ஐந்தாவது இயலும் இவரது இன்றியமையாத பணியாகிய மறைமாவட்டத் திருப்பணியாளர்களை இவர் உருவாக்கியமைப் பற்றி ஆறாவது இயலும் கூறுகின்றது.

யாழ்.ஆயர் தமது ஆசியுரையில் - இவரது இன்றியமையாத இந்தப் பணியால், அ.ம.தி சபை ஆயரான இவருக்குப் பின்பு யாழ்ப்பாணம், மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை மறைமாவட்டங்களை ஆளுகை செய்யும் ஆயர்கள் மறைமாவட்டத் திருப்பணியாளர்களேயாவர் என்று குறிப்பிட்டு, இந்த நூலின் முக்கியத்துவத்தைச் சுட்டிக் காட்டியுள்ளார்.

அருட் கலாநிதி அ.பி.ஜெயசகரம் - காலத்தின் குழந்தையாகிய முதல் சுதேச ஆயரின் வாழ்வும், பணியும் அக்கால நெருக்குதல்கள் மத்தியில் ஆழமாக ஆய்வு செய்யப்பட்டுள்ளதென்று தமது அணிந்துரையில் குறிப்பிட்டுள்ளார்.

## ஜெயலலிதாவின் தொகுதி என்பதால்

# எந்தவித குறையுமின்றி வாழும் தமிழக ஆண்டிப்பட்டி மக்கள்!



மதுரை —

பார்த்துப் பார்த்து செப்பனிடப்படும் வீதிகள், தேடித் தேடி போடப்படும் குழாய்கள், தோண்டித் தோண்டி கட்டப்படும் சாக்கடைகள், ஓடி ஓடி ஆட்களை ஏற்றும் பஸ்கள்...

- இந்தக் காணக்கிடைக்காத காட்சிகளை தமிழகத்தின் ஆண்டிப்பட்டி தொகுதியிலேயே காணலாம்.

முதலமைச்சர் ஜெயலலிதாவின் தொகுதி என்பதை இந்தத் தொகுதியின் எந்த மூலைக்குச் சென்றாலும் கண்கூடாகக் காணலாம். அந்த அளவுக்கு ஏராளமான பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. கிராமங்களுக்குக் கூட வீதிகள் செல்கின்றன. குடி நீர் கிடைக்கவில்லையென்ற குற்றச்சாட்டு அநேகமாக தொகுதியில் இல்லை. போக்குவரத்து வசதிக்கும் குறைவில்லை. இப்படி ஊட்டி ஊட்டி வளர்க்கப்படும் ஆண்டிப்பட்டியில் ஜெயலலிதா மீண்டும் போட்டியிடுவாரா என்பதுதான் இப்போதைக்கு அரசியல் அரங்கில் கேட்கப்படும் கேள்வி.

ஆண்டிப்பட்டி இடைத்தேர்தலில் போட்டியிட்டபோதே எனது ஆண்டிப்பட்டி தொகுதி, எனது மக்கள் என்றுதான் பிரசாரத்தின்போது ஜெயலலிதா பேச்சை தொடக்கினார். அப்போதும் கூட எதிர்க்கட்சியினர் வெற்றிபெற்ற பிறகு ஆண்டிப்பட்டி பக்கம் ஜெயலலிதா எட்டிக்கூடப் பார்க்கமாட்டார் என்று பதிலடி கொடுத்தனர்.

ஆனால் நடந்ததே வேறு. வெற்றி பெற்று மீண்டும் முதல்வராகப் பதவியேற்ற பிறகு 6 முறை தொகுதிக்கு வந்து சென்று விட்டார் ஜெயலலிதா. இதன்மூலம் தன்னைப்பற்றி வந்த விமர்சனங்களுக்குப் பதில் தந்து விட்டார்.

அது மட்டுமல்ல, ஒவ்வொரு முறை வரும்போதும் பல கோடி ரூபா திட்டங்களைத் தொடக்கி வைக்கிறேன் என அறிவிப்பும் செய்கிறார். இடைத்தேர்தலின்போது அவர் கூறிய மிக முக்கியமான வாக்குறுதி ஆண்டிப்பட்டியில் மருத்துவக்கல்லூரி தொடங்குவேன் என்பதுதான். அதை நிறைவேற்றியும் காட்டிவிட்டார். இந்தக் கல்லூரி செயற்படுவதற்கு அகில இந்திய மருத்துவ சபை அங்கீகாரம் தரவில்லை. அங்கீகாரத்தைப் பெற்றுத்தருவதற்கு தமிழகத்தைச் சேர்ந்த மத்திய அமைச்சர்கள் எந்த உதவியும் செய்வதில்லையெனவும் புகார் கூறுகின்றார். 5 மற்றும் 6 ஆவது முறை ஆண்டிப்பட்டிக்கு வந்த போது இந்தக் குற்றச்சாட்டை ஜெயலலிதா தொடர்ந்து கூறி வருகிறார்.

ஒவ்வொரு முறை பேசும்போதும் தமிழகத்திற்கே நான் முதல்வர் என்றாலும் ஆண்டிப்பட்டி எனது தொகுதி. எனது மக்களுக்கு நான் தொடர்ந்து பாடுபடுவேன் என்று பேசி ஆண்டிப்பட்டி மீது தனக்குள்ள ஒட்டுதலை மீண்டும் அழுத்தமாகச் சொல்கிறார்.

அடுத்த முறை போட்டியிடப்போவதில்லையென நினைக்கும் எந்தத் தொகுதிக்கும் எந்த வி.ஐ.பியும் இத்தனை முறை வந்து செல்ல மாட்டார். இதுவும் மீண்டும் இங்கு ஜெயலலிதா போட்டியிடுவார் என்பதை உறுதிசெய்கிறது.

சென்ற எம்.பி தேர்தலில் பெரியகுளம் தொகுதிக்குள் அடங்கிய 6 சட்ட சபை தொகுதிகளில் அ.தி.மு.கவின் மானத்தைக் காப்பாற்றியது ஆண்டிப்பட்டி மட்டுமே. இங்குதான் தி.மு.கவை விட அ.தி.மு.க 12 ஆயிரம் வாக்குகள் அதிகம் பெற்றது. அவ்வளவு எதிர்ப்பு அலையையும் மீறி அ.தி.மு.க இங்கு முன்னணிக்கு வந்தது. இது ஜெயலலிதாவுக்கு உள்ள செல்வாக்கைத்தான் காட்டுகிறது. இதையெல்லாம் கணக்குப் போட்டுப்பார்க்கும் ஜெயலலிதா இங்கு போட்டியிடத்தானே முடிவுசெய்வார்?

அது மட்டுமல்ல, இப்போதும் ஆண்டிப்பட்டி தொகுதியில் மட்டும் எந்த மக்கள் பிரச்சினை என்றாலும் அது முதல்வர் அலுவலகம் வரை எடுத்துச் செல்லப்படுகிறது. இத்தொகுதியில் எங்காவது கோரிக்கைகளை வலியுறுத்தி மக்கள் போராட்டம் என தகவல் கிடைத்தால் அதிகாரிகள் பம்பரமாக சுழல்கின்றனர். பிரச்சினையைத் தீர்த்தபிறகுதான் வேறு வேலை பார்க்கின்றனர். அட நமது அரச அதிகாரிகளா இவர்கள் என ஆச்சரியப்பட வைக்கின்றனர்.

ஆண்டிப்பட்டி தொகுதி மீது ஜெயலலிதாவின் பார்வை எப்போதும் இருக்கிறது என்பதற்கு இவையெல்லாம் சான்றுகள்.

சட்டசபைத் தேர்தல் அறிவிப்பு வெளியாவதற்கு முன்பே மீண்டும் ஆண்டிப்பட்டிக்கு வந்து நலத்திட்டங்களை ஜெயலலிதா தொடக்கி வைப்பார் என்கின்றனர்.

# வெற்றிவாய்ப்பு அதிகமுள்ள தொகுதியை தேடும் விஜயகாந்த்



மதுரை —

தென் மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு தொகுதியில் நிற்கவுள்ள விஜயகாந்த் வெற்றிவாய்ப்பு அதிகமுள்ள பாதுகாப்பான தொகுதியைத் தேடிவருகிறார்.

மதுரை மத்திய மற்றும் மேற்கு, திருமங்கலம், திருப்பரங்குன்றம், சிவகாசி, அருப்புக்கோட்டை என பாதுகாப்பான தொகுதியைப் பட்டியலிட்டு தேர்வுசெய்யும் பணியில் அவருக்கு நெருக்கமானவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

தென் மாவட்டங்களுடன் ஒப்பிடுகையில் கடலூர், சேலம், ஈரோடு போன்ற மாவட்டங்களில் ரசிகர் மன்றம் சார்பில் ஏராளமான நலத்திட்ட உதவிகள் வழங்கியிருப்பதால் தங்கள் மாவட்டத்தில் போட்டியிட வேண்டும் எனவும் விஜயகாந்தை அந்த மாவட்ட கட்சியினரும் வலியுறுத்தி வருகின்றனராம். இதனால் தொகுதித் தேர்வு விடயத்தில் இழுபறியே நீடிக்கிறது. இப்பிரச்சினையில் விஜயகாந்த் முடிவுதான் இறுதி என கட்சியினர் தெரிவித்தனர்.




# தொகுதிப் பங்கீடு குறித்து ம.தி.மு.க எச்சரிக்கையுடன் உள்ளதாக தகவல்



சென்னை —

கடந்த சட்ட சபை தேர்தலின்போது தொகுதி ஒதுக்கும் பிரச்சினை காரணமாக கூட்டணியை விட்டு ம.தி.மு.க வெளியேறும் நிலை ஏற்பட்டது. அதே நிலை இந்த முறை மீண்டும் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதில் ம.தி.மு.கவினர் எச்சரிக்கையாக உள்ளனர்.

கூட்டணியில் தி.மு.க, காங்கிரஸ் கட்சிகளுக்கு அடுத்த பெரிய கட்சி ம.தி.மு.கதான் என்பதை நிரூபிக்கும் வகையில் தொகுதிகளை கேட்டுப்பெற வேண்டும் என்பது ம.தி.மு.க தொண்டர்களின் விருப்பமாக உள்ளது.

ஏற்கனவே 1996ல் நடந்த சட்டசபை தேர்தலில் தனித்தனியே போட்டியிட்ட ம.தி.மு.க 5.79 சதவீதவாக்குகளும், பா.ம.க 3.84 சதவீத வாக்குகளும் பெற்றன.

இதேபோல் கடந்த 2004 ஆம் ஆண்டு லோக்சபா தேர்தலில் ம.தி.மு.க பெற்ற சராசரி வாக்கு 58.22 சதவீதம். ஆனால் பா.ம.க பெற்ற சராசரி வாக்கு 51.88 சதவீதம்தான். எனவே தமிழகம் முழுவதும் பரவலாக செல்வாக்குப் பெற்றுள்ள தங்கள் கட்சிக்கு உரிய கௌரவம் அளிக்கப்பட வேண்டும் என ம.தி.மு.க தலைமையிடம் தொண்டர்கள் வலியுறுத்தத் தொடங்கி விட்டனர்.

பா.ம.க விற்கு இணையாக தொகுதிகள் ஒதுக்கீடு வேண்டும். குறைந்த பட்சம் 25 தொகுதிகளாவது பெற வேண்டும் என ம.தி.மு.கவினர் விரும்புகின்றனர். ஆனால் 15 தொகுதிகளில் தொடங்கி 18க்குள் ம.தி.மு.கவை சரிக்கட்டி விடலாம் என்பது கூட்டணித் தலைமையின் கணக்கு. தொகுதி பங்கீட்டில் சிக்கல் ஏற்பட்டால் கடைசியில் ம.தி.மு.கவை கூட்டணியிலிருந்து வெளியேற்றவும் தி.மு.க தலைமை தயங்காது என்பது கடந்தகால அனுபவம்.

ம.தி.மு.கவில் கலைப்புலி தாணு, விஜயா தாயன்பன், பாலவாக்கம் சோமு, ஆரணிராஜா, மாநில துணை செயலர் சத்யா, திருப்பத்துார் அழகிரி, தஞ்சை மலர்மன்னன், நடராஜன், ஈரோடு கணேசமூர்த்தி, கோவை கண்ணப்பபன், மாரியப்பன், கம்பம் ரமணி, கன்னியாகுமரி ரத்தினராஜ், விருது நகர் சண்முக சுந்தரம், சிவகங்கை சிவந்தியப்பன், மதுரை வீர இளவரசன், கடலூர் சபாபதி மோகன், திண்டிவனம் டாக்டர் மாசிலாமணி என வேட்பாளர் பட்டியல் வேகமாகத் தயாராகி வருகிறது.

# கவலைகள் கொழுப்பாக மாறுவதால் மாரடைப்பு ஏற்படுவதாக புதுத்தகவல்

நியூயோர்க் —

கவலை எப்படிக் கொழுப்பாக மாறும்? மாறுமென்கின்றனர் மருத்துவ நிபுணர்கள். அதனால்தான் மாரடைப்பு வருகின்றது என்றும் புது தகவல் தருகின்றனர்.

மாரடைப்பு, இரத்தத்தில் கொலஸ்ரோல் என்ற கொழுப்பு சேர்வதால் இரத்த ஓட்டம் பாதிக்கப்பட்டு, வால்வுகள் பாதிப்பு அடைகிறது என்பதுதான் அடிப்படைக்காரணம். அந்தக் கொலஸ்ரோல் நாம் சாப்பிடும் உணவில், பிடிக்கும் சிகரெட்டில், குடிக்கும் மதுவில் இருக்கிறது. அதனால்தான் நாம் கொலஸ்ரோல் இல்லாமல் இருந்தால் மாரடைப்பு வராது என்று நம்புகின்றோம்.

ஆனால், கொழுப்பு இல்லாவிட்டாலும் மாரடைப்பு வருகிறதே, அதற்கு என்ன காரணம்? இது குறித்து மருத்துவ நிபுணர்கள் இன்னும் ஆராய்ந்தபடிதான் இருக்கின்றனர். ஆனால் ஒன்றை மட்டும் உறுதிப்படுத்தி விட்டனர். பெரும்பாலான வியாதிகளுக்கு நம் மனமும் முக்கிய காரணம். மனம் பாதிக்கப்பட்டால், உடல் பாதிக்கப்படுகிறது, மூச்சு பாதிக்கப்படுகிறது என்கின்றனர். மனம் பாதிக்கப்படுவதால் ஏற்படும் வியாதிகளுக்கு சைக்கோ சொமாட்டிக் காரணிகள்தான் காரணம் என்று மருத்துவ ரீதியாக சொல்வதுண்டு.

மனதில் தேவையில்லாததை போட்டுக்கொண்டு கவலைப்படுவது, யாருக்காவது செய்த தவறை உள்ளுக்குள்ளேயே வைத்துப் புழுங்குவது, குடும்பத்தில், வெளியில் பிரச்சினை என்பதால் நொந்து கொள்வது, பிள்ளைகள் படிக்கவில்லையே என்று பதற்றமடைவது ஆகியவைதான் மனதில் அழுத்தம் ஏற்படக் காரணம்.

இப்படி மனம் பாதிக்கப்படுவது பற்றி தொடர்ந்து ஆராய்ச்சிகள் நடந்த வண்ணம் இருக்கின்றன. கொழுப்பே இருக்க வேண்டாம், மனம் பாதிக்கப்பட்டாலே, அதனால் இரத்த அழுத்தத்தில் மாற்றம் ஏற்பட்டு, மாரடைப்பு வர வாய்ப்புண்டு என்று மருத்துவ நிபுணர்கள் கூறுகின்றனர். அமெரிக்காவில் மருத்துவ நிபுணர்கள், இது தொடர்பாக 20 ஆரோக்கியமான ஆண், பெண்களை எம்.ஆர்.ஐ ஸ்கான் மூலம் பரிசோதித்தனர்.

அப்படிப் பரிசோதிக்கும் போது, அவர்களுக்கு கணினி மூலம் சில திட்டங்கள் தந்து, அதன் மூலம் அவர்கள் மனதில் அழுத்தம் ஏற்படுவதைக் கண்டறிந்தனர். அப்படி அழுத்தம் அதிகமாகும்போது, அது இரத்த அழுத்தத்திலும் மாற்றம் ஏற்படுத்துகின்றது என்றும் கண்டறிந்தனர்.

இந்தப் பரிசோதனைகளில் கண்ட முடிவுகளின் அடிப்படையில் மேலும் ஆராய்ந்து, மருத்துவ நிபுணர்கள் மாரடைப்பு வரக்காரணம் மனம்தான். அதில் எந்தக் காரணத்தினாலும் அழுத்தம் ஏற்பட்டால், அது உடலைப் பாதிக்கிறது. அப்படிப்பாதிக்கும் போது இரத்த அழுத்தம் பாதிக்கப்படுகிறது. அதுதான் மாரடைப்புக்குக் காரணம். அதனால், மனதில் அழுத்தம் அதிகப்படாமல் இருக்கவேண்டும். அதற்கு மனரீதியான தெரபிகள் முக்கியம் என்று கூறியுள்ளனர்.

அமெரிக்காவில், யுரேகா அலேர்ட் என்ற இணையத்தளத்தில் இது தொடர்பான தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன. மனம் மூலம்தான் மாரடைப்பு அதிகரிக்கிறது என்பதை நிரூபிக்க மருத்துவ ரீதியாக சைக்கோ பிசியோலஜி அடிப்படையில் இன்னும் ஆராய்ச்சிகள் நடத்த வேண்டும் என்றும் நிபுணர்கள் கூறுகின்றனர்.




# குவைத் மன்னர் காலமானர்

குவைத் மன்னர் காலமானர். குவைத் மன்னர் ஷேக் ஜாபர் அல் அகமது அல் சாபா நேற்று காலமானர் என உள்ளூர் தொலைக்காட்சி நிறுவனம் தெரிவித்துள்ளது. அவருக்கு வயது 77. மூளையில் ரத்தக்கசிவு நோயால் அவர் ஏற்கனவே பாதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# பாகிஸ்தானில் தாக்குதல் நடந்த இடம்

ஆப்கானிஸ்தான் எல்லை அருகேயுள்ள பாகிஸ்தான் பகுதிகளில் அல்குவைதா தீவிரவாதிகள் நடமாட்டத்தை அமெரிக்க உளவுத்துறை கண்காணித்து வருகிறது. பஜவூர் பழங்குடி பகுதியில் அமெரிக்கா தாக்குதல் நடத்தியிருக்கிறது. இதையொட்டிய பகுதிகளில் ஏற்கனவே இது போன்ற தாக்குதல்களை நடத்தியிருக்கிறது. இத்தாக்குதலில் தீவிரவாதி ஒசாமாவின் வலதுகரமான அய்மான் அல் ஜவகரி கொல்லப்பட்டிருக்கலாம் என்று தகவல்கள் கூறுகின்றன. ஜவகரி தலைக்கு அமெரிக்க ரூ.100 கோடி பரிசு ஏற்கனவே அறிவித்திருந்தது.




1981ல் எகிப்து அதிபர் அன்வர் அல் சதாத் படுகொலையில் அல் ஜவகரிக்கு (இடது) தொடர்பு உள்ளதாக சந்தேகிக்கப்படுகிறது.

ஈழநாடு
The Leading Daily of Tamils' Homeland

# தமிழர் தரப்பு கோரிக்கை ஏற்பு; திருமலை ஹர்த்தால் நிறுத்தம்!

திருகோணமலை

வடக்கு - கிழக்கு மாகாண பொலிஸ் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் பாலசூரிய வழங்கிய உறுதி மொழிகளை அடுத்து கடந்த 3 ஆம் திகதி முதல் திருகோணமலையில் மேற்கொள்ளப்பட்டுவந்த ஹர்த்தால் நடவடிக்கைகள் நேற்று முதல் கைவிடப்பட்டுள்ளதாக திருகோணமலை மாவட்ட பொங்குதமிழ் சமூகம் நேற்று மாலை அறிவித்தது.

நேற்றுக் காலை திருகோணமலை மாவட்ட பொங்குதமிழ் சமூகம், தமிழ் மக்கள் பேரவை மற்றும் பாடசாலை அதிபர்கள், மதப்பெரியோர் ஆகியோருக்கும் வடக்கு - கிழக்கு மாகாண பொலிஸ் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தலைமையிலான பாதுகாப்பு தரப்பிற்கும் இடையில் திருகோணமலையில் எழுந்துள்ள இயல்புவாழ்க்கை பாதிப்பு தொடர்பான பேச்சுக்கள் கிழக்கு மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் அலுவலகத்தில் நடைபெற்றது.

மேற்படி பேச்சுக்களில் தமிழர் தரப்பால் முன்வைக்கப்பட்ட ஐந்து கோரிக்கைகளை நிறைவேற்றுவதாக சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் பாலசூரிய ஏற்றுக்கொண்டார்.

நேற்று முன்தினம் காந்திநகர் பகுதியில் நகரசபை விடுதி மீது மேற்கொண்ட கிரனேட் தாக்குதல் தொடர்பாக உப்புவெளிப் பகுதி பொலிஸ் பொறுப்பதிகாரி வெளியிட்ட ஒருதலைப் பட்சமானஅறிக்கையை சுட்டிக்காட்டி தமிழ்த்தரப்பினர் தமது கடும் ஆட்சேபத்தினை தெரிவித்தனர்.

நகரசபை விடுதிக்குள் இருந்த கிரனேட் வெடித்தே அங்கிருந்தவர்கள் காயமடைந்தனர் என்ற உப்புவெளி பொறுப்பதிகாரியின் கருத்து தவறென்பதை தாம் ஏற்றுக்கொள்வதாகவும், இத்தகைய பிழையான அறிக்கை வெளியிடப்பட்டமைக்கு தாம் மனம் வருந்துவதாகவும் சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் கூறினார்.

மேலும் சம்பவம் குறித்து பாரபட்சமற்ற விசாரணையை நடத்துவதாகவும், சம்பவத்தை நேரில் கண்ட சாட்சிகள் இருந்தால் தம்மிடம் அழைத்து வரும்படியும் அவர்கள் எந்தவித அச்சுறுத்தலும் இன்றி வாக்குமூலம் அளிக்க தாம் உதவுவதாகவும், தமிழில் வாக்குமூலத்தைப்பதிவு செய்ய உடன் நடவடிக்கை மேற்கொள்வதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

தமிழர் தரப்பால் முன்வைக்கப்பட்ட பிரதான ஐந்து அம்ச கோரிக்கை விவரம் வருமாறு -

அரச தொழில் நுட்பக் கல்லூரியின் திருகோணமலை - மிகிந்தபுர வளாகத்தில் முகாமிட்டுள்ள இராணுவ முகாம் மற்றும் நகரின் சகல தமிழ் மொழி மூலப் பாடசாலைகளின் அயலிலும் நிறுத்தப்பட்டுள்ள இராணுவம் அகற்றப்படும் அதே வேளை, நகரில் உள்ள தேவாலயங்கள், கோவில்கள், பள்ளிவாசல்களுக்கு முன்னால் அமைக்கப்பட்டுள்ள இராணுவ காவலரண்களும் அகற்றப்படல் வேண்டும், மேலும் சென்ற 2 ஆம் திகதி மாலை 5 தமிழ் மாணவர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட பெரிய கடை கடற்கரைப் பகுதியில் நிறுத்தப்பட்டுள்ள படையினர் முற்றாக விலக்கிக் கொள்ளப்படல் வேண்டும்.

படையினர் வீதிக் கடமையில் ஈடுபடும்போதும், மோட்டார் சைக்கிளில் ரோந்தில் ஈடுபடும்போதும், முகத்தை கறுப்புத் துணியினால் மறைத்த வண்ணம் செயற்படுவது உடனடியாக நிறுத்தப்படல் வேண்டும்.

வீதிக் காவலரண்கள் மற்றும் வீதிச் சோதனைச் சாவடிகளில் படையினரின் எண்ணிக்கைக்கு மேலதிகமாக பொலிஸாரும் இணைந்து செயற்பட வைக்கப்படல் வேண்டும். எந்தக் காவலரணிலும் தனியாக படையினர் பாதுகாப்பில் ஈடுபடுத்தப்படக் கூடாது.

படையினரோ, பொலிஸாரோ எந்த ஒரு தமிழரையும் கைது செய்தால், உடனடியாக கைதுசெய்த அதிகாரியின் பெயர், கைது செய்யப்பட்டவரின் பெயர், என்ன காரணத்திற்காக கைது இடம்பெற்றது போன்ற விபரங்கள் அடங்கிய ஒரு ஆவணம் - கைது செய்யப்படுபவரின் உறவினருக்கு அல்லது நண்பருக்கு கைது செய்த அதிகாரியால் வழங்கப்படல் வேண்டும்.

ஊர்காவற் படையினர் எதுவித காரணமும் கொண்டு தமிழ் கிராமங்களுக்குள் தனியாக காவல் கடமைகளுக்கு செல்லக்கூடாது. மேலும் எக்காரணம் கொண்டும் தமது சீருடையின்றி, துப்பாக்கிகளுடன் தமிழ் கிராமங்களுக்குள் செல்லக்கூடாது. அத்துடன் பொலிஸாருடன் இணைந்து மட்டுமே தமிழ் கிராமங்களுக்குள் செல்ல வேண்டும்.

மேற்படி கோரிக்கைகள் முழுமையாக நிறைவேற்றப்படுமாயின் மட்டுமே தமிழர் தரப்பால் மேற்கொள்ளப்பட்டுவரும் ஹர்த்தால் விலக்கிக் கொள்ளப்படும் என்று கூறப்பட்டது. மேற்படி கோரிக்கைகள் நிறைவேற்றப்படுமென்று பொலிஸ் தரப்பினரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இதேவேளை, வீதிக்கடமையில் ஈடுபட்டுள்ள படையினரின் நடவடிக்கைகளை மாலை 6 மணிக்குப் பின்னர் படைத்தரப்பு மற்றும் பொலிஸ் தரப்பு உயர் அதிகாரிகளைக் கொண்ட ரோந்து அணியிர் மணித்தியாலத்திற்கு ஒரு முறை கண்காணிக்க வேண்டும்.

இதன் மூலம் சாதாரண நிலையில் உள்ள காவல் கடமையில் ஈடுபடும் படையினர் அத்துமீறல்களில் ஈடுபடுவதைத் தடுக்கமுடியும் என்ற கோரிக்கை தமிழர் தரப்பால் பொதுவாக முன்வைக்கப்பட்டது. இதனையும் சாதாரணமானமுறையில் பரிசீலிப்பதாக பொலிஸ் தரப்பு கூறியது இங்கு குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, திருகோணமலையில் எதிர்காலத்தில் படைத்தரப்பு தொடர்பில் ஒரு சுமுகமான நிலையை உருவாக்கும் விதத்தில் நேற்று நடந்த சந்திப்பு போன்ற சந்திப்பை ஒரு மாதத்திற்கு ஒரு முறை தமிழர் தரப்புடன் நடத்தவும் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் இணக்கம் தெரிவித்துள்ளர்.

சந்திப்பில் பொங்குதமிழ் சமூகத்தின் சார்பில் பேரின்பராசா, லோகநாதன், ஆறுமுகம், தமிழ்மக்கள் பேரவை சார்பில் வ.விக்னேஸ்வரன், கௌரி முகுந்தன் ஆகியோரும், மதப் பெரியார்கள் சார்பில் பிரம்மஸ்ரீ சோ.இரவிச்சந்திரக் குருக்கள், பிரம்மஸ்ரீ குமார விக்னேஸ்வர குருக்கள், அருட்திரு அன்னதாஸ், அருட்திரு வின்சென்ட் ஆகியோருடன் லயன்ஸ் கழக பிரதிநிதிகள் மற்றும் நகரில் உள்ள சகல பாடசாலைகளின் அதிபர்கள் உட்பட 42 பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

பாதுகாப்பு தரப்பில் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் பாலசூரிய, கிழக்குப் பிராந்திய பிரதிப் பொலிஸ் மா அதிபர் றொகான் அபயகுணவர்த்தன, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அம்பென்வெல மற்றும் திருகோணமலை தலைமைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆகியோருடன் திருகோணமலை மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதியின் பிரதிநிதி கேணல் விக்கிரமசிங்க, கூட்டுப்படைகளின் கிழக்குப் பிராந்திய தளபதியின் பிரதிநிதி ஆகியோரும் கலந்துகொண்டனர். (10,04)

## வடக்கு - கிழக்கு ஆளுனராக முன்னாள் கடற்படை அதிகாரி!

கொழும்பு

கடற்படையின் முன்னாள் தலைமை அதிகாரி நியர்அட்மிரல் மொகான் விஜயவிக்கிரமவை வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநராக நியமிப்பதற்கு ஜனாதிபதி தீர்மானித்துள்ளார்.

தற்போது வடக்கு - கிழக்கு ஆளுநராகவுள்ள ரிரோன் பெர்னாண்டோவை வெளியுறவு அமைச்சின் ஆலோசகராக நியமிப்பதற்கும் ஜனாதிபதி தீர்மானித்துள்ளார்.

வடக்கு - கிழக்குஆளுநராக மொகான் விஜேவிக்கிரம பதவியேற்பதற்காக தற்போதைய ஆளுநர் ரிரோன் பெர்னாண்டோ அடுத்த வாரம் பதவி விலகவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## தைப்பொங்கல் தினத்தன்று 150 குடும்பங்கள் இடம்பெயர்வு!

யாழ்ப்பாணம்

தைப்பொங்கல் தினமான நேற்று முன்தினம் மட்டும் 150குடும்பங்கள் யாழ்குடாநாட்டிலிருந்து வெளியேறி வன்னிப்பகுதிக்கு இடம்பெயர்ந்திருப்பதாகத் தெரியவருகிறது.

இடம்பெயர்ந்து வந்த குடும்பங்களைத் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர் முகமாலையிலுள்ள பிரதான நலன்பேணும் நிலையத்தில் பதிவுசெய்தனர்.

பின்னர் அங்கு வைத்து சமைத்த உணவுகள் வழங்கப்பட்டு தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் இடம்பெயர்ந்தோருக்கான வாகனப் போக்குவரத்துச் சேவைகூடாக வன்னிக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

இவர்கள் பிரதேச மட்டங்களிலுள்ள நலன்பேணும் நிலையங்களில் தங்க வைக்கப்பட்டு தற்போது பராமரிக்கப்பட்டு வருகின்றனர்.

இந்தக் குடும்பங்களைச் சேர்ந்த சிலர் உறவினர் வீடுகளிலும் தங்கியுள்ளனர். உறவினர் வீடுகளிலும் நலன் பேணும் நிலையங்களிலும் தங்க வைக்கப்பட்டுள்ளவர்களுக்கு நிவாரண உதவிகளை தமிழர் புனர்வாழ்வுக்கழகம் வழங்கி வருகின்றது.

## அரசின் சமிக்ஞையைப்...

நடத்தவுள்ளதாகவும், பின்னர் ஜனாதிபதி மகிந்தவுடன் பேச்சு நடத்துவாரெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பேச்சுக்களின்போது விடுதலைப் புலிகளுக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆக்கபூர்வமான செய்தி எதனையும் தெரிவிக்க முன்வந்தால் மட்டுமே கலாநிதி அன்ரன் பாலசிங்கம் கொழும்பு வந்து ஹெலி மூலம் வன்னிக்குச் செல்வார்.

கலாநிதி அன்ரன் பாலசிங்கம் சொல்ஹெய்முடன் கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து கிளிநொச்சிக்கு புறப்பட்டுச் சென்று மீளவும் அவருடனேயே திரும்பிச் செல்வதற்கு வாய்ப்புகள் இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

அரசதரப்பில் தீர்க்கமான முடிவோ அல்லது செய்தியோ வழங்கப்படாவிடின் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் வன்னிக்கு வருவது சந்தேகமே என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இலங்கைக்கான நோர்வே தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் நாளை வன்னிக்கு விஜயம் மேற்கொண்டு விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை நடத்த வுள்ளார். எதிர்வரும் 23 ஆம் திகதி இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ள எரிக் சொல்ஹெய்ம் கிளிநொச்சிக்கு செல்வது குறித்த ஒழுங்குகளை செய்வதற்காகவே நாளை இந்தப் பயணத்தை நோர்வேத் தூதுவர் மேற்கொள்ள விருப்பதாக கூறப்படுகிறது.

## சீருடையினரால்...

அடையாளம் காட்டினார்.

இந்தச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது -

நேற்று முன்தினமிரவு மேற்படி இளைஞரின் வீட்டுக்குச்சென்ற ஆயுத பாணிகள் விசாரணைக்கு என அவரை அழைத்துச் சென்றதாகவும், அதன் பின்னர் அவர் வீடு திரும்பாத நிலையில், நேற்று அதிகாலை சுருவில் பகுதியிலுள்ள பற்றைக்குள் இருந்து சடலமாக மீட்கப்பட்டார்.

மேற்படி நபர் தோட்டத்தொழிலாளி என்றும், அவர் தனது வேலையை முடித்து விட்டு வீட்டுக்கு வந்த சற்றுநேரத்தில் ஆயுதபாணிகளால் கடத்திச் செல்லப்பட்டதாக ஊர்காவற்துறை பொலிஸாரிடம் இவரது மனைவி முறைப்பாடு செய்திருந்தார்.

இதேவேளை, சம்பவம் இடம்பெற்ற இடத்துக்குச் சென்ற நீதிபதி மரணவிசாரணைகளை மேற்கொண்ட பின்னர், சடலத்தை வைத்திய பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லும்படி பொலிஸாருக்கு பணிப்புரை விடுத்தார்.

எனினும் பொலிஸார் சடலத்தை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்ல முயற்சிக்காததையடுத்து, உறவினர்களாலேயே சடலம் வைத்தியசாலைக்குக் கொண்டுவரப்பட்டது. தற்போது சடலம் பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

## வரணியில்...

உயிரிழந்தவராவார்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது:-

நேற்றுக்காலை தனது வீட்டிலிருந்து அருகிலுள்ள ஆலயத்துக்குச் சென்று கொண்டிருந்த போது பற்றைக்குள் பதுங்கியிருந்த இனந்தெரியாத நபர்கள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாகவும், அவர் அந்த இடத்திலேயே உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவ இடத்துக்குச் சென்ற சாவகச்சேரி நீதிவான் பிறேம்சங்கர் மரண விசாரணையை மேற்கொண்ட பின்னர் சடலத்தை யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார்.

இதனையடுத்து கொடிகாமம் பொலிஸாரால் சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டு பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

### புலிகளின்...

மூலம் அவர்களது ஏமாற்று வித்தையை முறியடிக்கவேண்டுமென்றும் அவர்கள் ஜனாதிபதியிடம் எடுத்துக்கூறினர்.

பேச்சுக்கான இடத்தைத் தெரிவு செய்வது தொடர்பாக முடிவெடுப்பதற்கு எதிர்வரும் 19 ஆம் திகதி சர்வகட்சி மாநாடு இரண்டாவது தடவையாக கூடவுள்ளது. இந்த மாநாட்டில் பேச்சு நடத்தப்படும் இடம் குறித்த முடிவு எடுக்கப்படும் என்று தெரிகிறது.

## கைக்குண்டு வீச்சு

யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம் - காங்கேசன்துறை வீதியில் உள்ள பெரியபுலம் மகாவித்தியாலயத்துக்கு அருகாமையில் நேற்றுப் பிற்பகல் கைக்குண்டு வீச்சு நடத்தப்பட்டது.

பிற்பகல் 1.35 மணியளவில் நடத்தப்பட்ட இக்கைக்குண்டுத் தாக்குதல் சம்பவத்தில் எவருக்கும் எவ்வித சேதமும் ஏற்படவில்லையாயினும் மாலை 4 மணிவரை காங்கேசன்துறை வீதியூடான போக்குவரத்து தடைசெய்யப்பட்டிருந்தது. வர்த்தக நிலையங்கள் யாவும் உடனடியாக மூடப்பட்டதுடன் சனநடமாட்டமின்றி வீதி வெறிச்சோடிக் காணப்பட்டது. இச்சம்பவத்தையடுத்து படையினரால் அருகிலுள்ள வீடுகளில் தேடுதல் நடத்தப்பட்டதாகத் தெரியவருகிறது.

## விமானப்படைச் சிப்பாய் மீது திருமலையில் கிரனேட் வீச்சு!

திருகோணமலை

திருகோணமலையிலுள்ள அன்புவழிபுரம் பகுதியில் நேற்றிரவு 8 மணியளவில் விமானப்படையைச் சேர்ந்த ஒருவர் மீது கைக்குண்டு ஒன்று வீசப்பட்டதில் அவர் பலத்த காயங்களுக்குள்ளானார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவத்தில் 3 பொதுமக்களும் காயங்களுக்கு இலக்காகியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (10, 4)

## அமெரிக்க...

அமைச்சர் நிக்கலஸ் பேர்ன்ஸ் தலைமையிலான குழுவினர் இரண்டு நாள் விஜயம் மேற்கொண்டு கொழும்பு வரவுள்ளனர்.

மகிந்த ராஜபக்ஷவை சந்தித்துப் பேசவுள்ள இவர்கள், சந்திப்பை முடித்துக்கொண்டு இந்தியா செல்லவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அங்கு இம்மாத இறுதியில் செல்லவுள்ள அமெரிக்க ஜனாதிபதியின் விஜயம் குறித்த ஏற்பாடுகளை மேற்கொள்வது தொடர்பான பேச்சுக்களில் ஈடுபடவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த குழுவினர் கொழும்பில் தங்கியிருக்கும் காலப்பகுதியில் எதிர்வரும் 22 ஆம் திகதி கொழும்பு வரவுள்ள நோர்வேயின் விசேட சமாதான தூதுவர் எரிக் சொல்ஹெய்மையும் சந்தித்து இலங்கை நிலவரம் குறித்து பேச்சு நடத்தவிருப்பதாகத் தெரியவருகிறது.


## பதவி வெற்றிடங்கள்

செயல்திறன் அரங்க இயக்கம் நடைமுறைப்படுத்தும் உளசமூக மற்றும் நாடக அரங்கச் செயற்திட்டங்களில் உள்ள பின்வரும் பதவிகளுக்கு தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1) நாடகத்துறைப் பயிற்றுவிப்பாளர் (ஒருவர்)

சங்கீதம்/நடனம்/நாடகம் ஆகியதுறைகளில் பட்டம் பெற்றிருத்தல்/ வட இலங்கை சங்கீத சபையினால் நடாத்தப்படும் 5ஆம், 6ஆம் தர பரீட்சையில் சித்தி அடைந்திருத்தல் அத்துடன் நாடகத்துறை அனுபவம்.

கொடுப்பனவு ரூபா 10000/-

2) போதனாசிரியர் (ஒருவர்)

வட இலங்கை சங்கீதசபையினால் நடாத்தப்படும் ஆசிரியர் தரப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் அத்துடன் க.பொ.த. உயர்தரத்தில் நாடகத்தில் சித்தியடைந்திருத்தல்.

கொடுப்பனவு ரூபா 8000/-

விண்ணப்ப முடிவுத்திகதி: 25.01.2006

விண்ணப்ப முகவரி:

செயல்திறன் அரங்க இயக்கம்
ACTIVE THEATRE MOVEMENT
அருளகம், ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி.

[C/5008]


இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 16.01.2006 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.